# திருக்குறளும் கிறித்தவமும்

முன்னுரை

வையத்து வாழ்வாங்கு வாழ வகை செய்யும் வாழ்வியில் நூல் திருக்குறள். உலக மாந்தர் அனைவரும் ஒரு குடும்பத்துக்குரியவர் என்னும் பொதுமையைப் உள்ளடக்கி, அவர் அனைவரும் உய்யும் நெறியைத் தீந்தமிழ்ப் பாவியமாக வடித்துக் கொடுத்தவர் தெய்வப்புலவர் திருவள்ளுவர். இனம், மொழி, மதம் முதலியவற்றைக் கடந்து, இறைவன் காட்டிய அறவொழுக்கத்தை அறம், பொருள், இன்பமாக வகுத்து உலகோர் வீட்டு நெறிப்பட, எளிய நடையில் செவ்விய கருத்துகளை ஈராயிரம் ஆண்டுகட்கு முன்னரே திட்பமாகவும் நுட்பமாகவும் திரட்டிக் கொடுத்தவர் திருவள்ளுவர்.

தமிழ் மொழி என்னும் பெயரோ, தமிழ்நாடு என்னும் பெயரோ, திருவள்ளுவர் வாழ்ந்த காலத்தில் பாகுபடுத்தப் பட்டிருந்த சேர சோழ பாண்டியர் என்னும் மூவேந்தர் பெயர்களோ திருக்குறளில் இடம் பெறாமையே, திருவள்ளுவர் உலகியல் என்னும் மிகப் பரந்த நோக்குடையவர் என்பதற்குச் சான்றுகள் என்று அறிஞர் பலர் குறிப்பிடுவர். இதனால், பாரதியாரும்

“வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு”

என்று பறைசாற்றினார். ‘திருக்குறள் ஆராய்ச்சிப் பதிப்பில்’, “அவ்வந் நாட்டின் நீதி நூல்கள் தாம் எழுந்த இடத்துக்கும் காலத்துக்கும் ஏற்பனவற்றை விரிவாகச் சொல்லும் ; திருக்குறளோ அவ்வாறு சொல்லாமல், மனித வாழ்வின் அடிப்படையான நலத்தைக் கருதி, என்றும் எங்கும் நலம் பயப்பனவற்றை எடுத்துக் காட்டி, இவற்றைச் செய்க என்றும், எங்கும் தீங்கு பயப்பனவற்றை எடுத்துரைத்து, இவற்றைச் செய்யற்க என்றும் கூறுகிறது. இதனால்தான் இது எந்தக் காலத்துக்கும் பொது நூலாகவும், எந்த நாட்டுக்கும் பொதுவானதாகவும் மிளிர்கிறது” என்று குறிப்பிடப்படுகிறது.

திருக்குறளின் சிறப்புகள் :

திருக்குறள் எ ல்லாக் காலத்துக்கும், எல்லா நாட்டினருக்கும் உரிய பொதுவான உயர்ந்த கருத்துகளையும் உண்மைகளையும் ஒளிவிளக்கைப் போன்று விளக்கிக் காட்டுகிறது. ‘எப்பொருளும் யாரும் இயல்பின் அறிவுறச் செப்பிய வள்ளுவர்’ என்று பாரதம் பாடிய பெருந்தேவனார் குறிப்பிடுகிறார். செந்தமிழ் இலக்கியங்களில் பதினெண்கீழ்க் கணக்கு நூல்களில் ஒன்றாகத் திகழ்வது திருக்குறள். ‘முப்பால்’ என்னும் பெயராலும் இது பழந்தமிழப் பனுவல்களில் குறிக்கப்படுகிறது. இவ் இரண்டு பெயர்களன்றி வேறு பெயர்களும் இந்நூலுக்கு உண்டு.

இரண்டடிகளால் ஆனதால் ‘இரண்டு ;’ மேலான மறைநூலாதலால் ‘உத்தர வேதம் ;’ எழுதாக் கிளவிக்கு எதிரான வகையில் அமைந்ததால் ‘எழுதுண்ட மறை ;’ தமிழரின் மறையாதலால் ‘தமிழ் மறை ;’ தெய்வத் தன்மை வாய்ந்ததால் ‘தெய்வ நூல் ;’ பழமொழி போல் சுருங்கிய உருவினதால் ‘பழமொழி ;’ எல்லாச் சமயத்தார்க்கும் பொதுமையுடையதால் இது ‘பொதுமறை ;’ பொய் இல்லாத மொழிகளால் வகுக்கப்பட்டதால் ‘பொய்யா மொழி ;’ மருந்து போல் பயன்தரும் ஓம்படைச் சொற்களையுடையதால் ‘வாயுறை வாழ்த்து ;’ கருத்தா ஆகுபெயராக ‘வள்ளுவர் ;’ திருவள்ளுவரின்

வாய்மொழி என்பதனால், 'வள்ளுவன் வாய்ச் சொல்' – அறம், பொருள், இன்பம் என்னும் மூன்று அதிகாரங்களைக் கொண்டதால் 'முப்பால்' – இங்ஙனம் பல்வேறு சிறப்புப் பெயர்களைச் கொண்டது திருக்குறள்.

முழுவதும் குறள் வெண்பாவால் யாக்கப் பெற்ற, முதல் எழுத்தாகிய அகரத்தில் தொடங்கி, தமிழின் இறுதி எழுத்தாகிய னகரத்தில் முடிவு பெறும் தமிழ்நூல் திருக்குறள் ஒன்றுதான். மணக்குடவர், பரிமேலழகர், பரிதியார், பரிப் பெருமாள், தாமத்தர் முதலான பழம்பெரும் உரையாசிரியர் பத்துப் பேர் திருக்குறளுக்கு உரை எழுதியுள்ளனர். இத்தகு பெருமை வேறு எந்தத் தமிழ்நூலுக்கும் இல்லை. இன்று நூற்றிருபதுக்கும் மேற்பட்டோர் திருக்குறளுக்கு உரை எழுதியுள்ளனர். தனியாக நூல் முழுமைக்கும் எழுதப்பட்ட உரைகளேயன்றி, அறிஞர் பலர் தத்தம் நூல்களில் திருக்குறளை மேற்கோள் காட்டி, குறள்களுக்குப் புத்துரைகளையும் புதிய ஆய்வியல் விளக்கங்களையும் எழுதிக் காட்டியுள்ளனர். கிறித்தவர் போற்றும் திருவிவிலிய மறைநூலுக்கு அடுத்த நிலையில் வேற்றுமொழிகளில் மொழியாக்கம் பெற்ற சிறப்புடைய நூல் திருக்குறள் என்பர். வீரமாமுனிவர், ஜி.யு.போப், ஆல்பர்ட் சுவைட்சர், அருள்திரு. டூரூ போன்ற அயல்நாட்டவர் பலரால் மொழி பெயர்க்கப்பட்ட பெற்றியுடையது.

மதுரைத் தமிழ் நாகளாரின் கருத்துப்படி,

"எல்லாப் பொருளும் இதன்பால் உளஇதன்பால்
இல்லாத எப்பொருளும் இல்லை"

என்பதை எண்ணிறந்த பேரறிஞர் பலர் ஒத்துக் கொண்டுள்ளனர். சொற்சுவையும் பொருட்சுவையும் கவிச்சுவையும் நிரம்பப் பெற்று 'நின்றலர்ந்து தேன்பிலிற்றும் நீர்மைத்தாய்', 'உள்ளுதொறுள்ளுதொறுள்ளம் உருக்குவதாய்', 'சிந்தைக்கினிய செவிக்கினிய வாய்க்கினிய, வந்த இருவினைக்கு மாமருந்தாய்', 'நவில்தொறும் நூல்நயம்' தருவதாகவும் அமையப் பெற்ற அரும்பெட்டகமாய்த் திகழ்வது திருக்குறள். தமிழில் தோன்றிய திருக்குறள் உலகோர்க்கெல்லாம் புகழொளியும் புத்தொளியும் தருகிறது. 'வள்ளுவரைப் பெற்றதால், பெற்றதே புகழ் வையம்' என்று அறிஞர் உரைப்பது உண்மை உரையேயாகும்.

அறநூல் :

இயற்கை நெறிக்காலம், அறநெறிக்காலம், சமய நெறிக்காலம், தத்துவ நெறிக்காலம், அறிவியல் நெறிக்காலம் என்று தமிழ் இலக்கியங்களை அவை தோன்றிய பின்னணியில் வகைப்படுத்திக் காட்டுவர் அறிஞர். இதனடிப்படையில் நோக்கும் போது திருக்குறளை அறநெறிக் காலம் சார்ந்த நூலாகவே அறிஞருலகு வகுத்துள்ளது. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் திருக்குறள் கணக்கிடப்படுவதற்கு இதுவும் ஒரு காரணமாகும். திருக்குறளைத் தவிர, வேறு பத்து அறநூல்களும் பதினெண்கீழ்க் கணக்கில் காணப்படுகின்றன. 'புறநானூற்றுள்ளும் ஏனைய சங்க நூல்களுள்ளும் அறக்கருத்துகள் சில ஆங்காங்கே காணப்பட்ட போதும், அறக் கருத்துகளை மட்டும் எடுத்துக் கூறும் நூல்கள் சங்கமருவிய காலத்திலேயே எழுந்தன. சங்கச் சூழல் சங்க மருவிய காலச்சூழலாக வேறுபட்ட போது, இலக்கியப் போக்கிலும் இத்தகைய வேறுபாடு ஏற்பட்டது' என்பர் ஆ. வேலுப்பிள்ளை. எனவே, திருக்குறளை அறநூலென்று கூறலாம்.

சமய நூல் ?

திருக்குறளை ஒரு சமய நூலாகக் கொள்ளலாமா ? இதனை ஒரு சமய நூலாக ஆராய முற்பட்டவர் மிகச் சிலரே என்பர். இது குறித்துப் பன்மொழிப் புலவர் க. அப்பாத்துரையார்,

> "திருக்குறளை ஓர் ஒழுக்க நூல் என்று ஆராய்ந்தவர் உண்டு ; உலகியல் நூல் என்று ஆராய்ந்தவர் உண்டு ; அறிவு நூல் என்று ஆராய்ந்தவர் உண்டு ; சமய நூலாக ஆராய்ந்தவர் மிகச் சிலரே. ஆனால் உலகின் பிற வாழ்வில் ஆசிரியர்கள் போலத் திருவள்ளுவர் ஒழுக்கம் வேறாக, உலகியல் வேறாகக் கொள்ளாமல் இவையனைத்தையும் ஒரே வட்டத்தின் பல்திசை நோக்குகளாகக் கொண்டவராதலால், இந்த ஆய்வுகள் எல்லாமே திருக்குறளுக்கு முற்றிலும் பொருந்துபவையாக அமைந்துள்ளன"

என்று குறிப்பிடுவது நோக்கத்தக்கது. (சான்றாண்மை ஓர் ஒப்புரை. 1974)

திருக்குறள் ஓர் அறநூல் என்று போற்றப்படுவதில் எவ்வித ஐயமும் இல்லை. அதே சமயத்தில், அது 'உலகப் பொதுமறை', 'தமிழ் மறை' என்றும் பெயர்களால் சுட்டப்படுவது சிந்தனைக்குரியது. சமய நூல் ஒன்றுக்குத்தான் மறை என்னும் பெயர் குறிக்கப்படுகிறது.

திருவள்ளுவர் தெய்வப்புலவர் என்று அழைக்கப்படுகிறார். அவரது நூல் தெய்வ நூல் என்று அழைக்கப்படுகிறது. தெய்வத் தன்மை திருக்குறள் முழுமையும் பொதிந்து கிடப்பதால் அது தெய்வ நூலென்றும், அவர் தெய்வப் புலவர் என்றும் போற்றப்படுதல் சிறப்பிற்குரியனவாகும். திருக்குறள் 'என்னும் தெய்வ மாமறை' என்று சோடசாவதானம் சுப்பராயச் செட்டியார் போற்றுவது இக்கருத்தைத் தெளிவாக்குகிறது.

ஆரிய வேதங்களுக்கு மாறானது

ஆரியருடைய வேதங்களான இருக்கு, யசூர், சாமம், அதர்வணம் ஆகிய நான்கும் ஆரியருடைய வழிபாட்டினை வெளிப்படுத்திக் காட்டுவன ஆகும். இவற்றுள் வழிபாடுகள் காணப்படுகின்றனவே தவிர, சமயச் சிந்தனை காணப்படவில்லை. இந்தியச் சமயங்கள் எவையும் ஆரிய வேதங்களினின்றும் தோன்றவில்லை. வாய்மொழியாக வழங்கி வந்த வேதப்பாடல்கள் கூடத் திராவிடரோடு ஆரியர் கொண்ட தொடர்பிற்குப் பிறகே எழுதப்படலாயின. திராவிட முனிவராகிய வியாசரே ஆரியரின் வழிபாட்டுப் பாடல்களைத் தொகுத்து, வேதம் என்னும் பெயரையும் கொடுத்தவர் ; அதனாலேயே அவர் 'வேத வியாசர்' என வழங்கப்படுகிறார் என்பது. இவ்வாறு எழுத்துருவம் பெற்ற வேதங்களைத் திராவிடர் கற்கவோ கேட்கவோ கூடாது என்று மனு நூல் முதலான சாத்திரங்கள் வாயிலாகத் தடையும் விதித்தனர் ஆரியர்.

திருவள்ளுவரின் திருக்குறளோ ஆரிய வேதங்களுக்கு மாறுபட்டது. இதனை,

> ஆற்றல் அழியுமென் றந்தணர்கள் நான்மறையைப்
> போற்றியுரைத் தேட்டின் புறத்தெழுதார் – ஏட்டெழுதி
> வல்லுநரும் எல்லாரும் வள்ளுவனார் முப்பாலைச்
> சொல்லிடினும் ஆற்றல்சோர் வின்று

என்று கோதமனார் என்னும் புலவர், திருவள்ளுவ மாலையில் பாடுகிறார்.

ஒரு சாரார்,

"நான்மறையின் மெய்ப்பொருளை முப்பொருளா நான்முகத்தோன்
தான்மறைந்து வள்ளுவனாய்த் தந்துரைத்த நூன்முறையை"
(திருவள்ளுவமாலை, 4)

"ஓதற்கெளிதாய் உணர்தற் கரிதாகி
வேதப் பொருளாய் மிக விளங்கி" (தி. மாலை, 24)

"ஏதமில் வள்ளுவர் இன்குறள் வெண்பாவினால்
ஓதிய ஒண்பொருள் எல்லாம் உரைத்ததனால்
தாதவிழ் தார்மாற தாமே தமைப்பயந்த
வேதமே மேதக் கன" (தி. மாலை, 32)

"வேத விழுப்பொருளை வெண்குறளால் வள்ளுவனார்
ஓதவழுக் கற்ற துலகு" (தி. மாலை, 37)

"வேதப் பொருளை விரகால் விரித்துலகோர்
ஓதத் தமிழால் உரைசெய்தார்" (தி. மாலை, 42)

போன்ற திருவள்ளுவமாலைப் பாடல்களை எடுத்துக் காட்டி வேதப் பொருளையே திருக்குறள் காட்டுகிறது என்று வாதிடும் அறிஞர்களும் உண்டு.

திருவள்ளுவர் காலத்தில் வேதங்கள் எழுதப் பெறவில்லை. அவை எழுதாக் கிளவியாக வழங்கி வந்தன. அவற்றைப் பிராமணர் ஓதிய போது திராவிடரான திருவள்ளுவர் தம் காதுகளால் கேட்பதற்கும் உரிமையுடையவர் அல்லர். பிறகு எப்படி வேதங்களைக் கற்றுத் தன்மயமாக்கித் திருக்குறளாக வடித்திருக்க முடியும் ? ஒருவேளை, அவர் வேதங்களைக் கற்று அல்லது அறிந்திருந்தார் என்றே வைத்துக் கொண்டாலும், வேதங்களில் இல்லாத கருத்துகளை அல்லவா திருக்குறள் கூறுகிறது ! வேதங்களில் காணப்படாத கடவுளை, அதுவும், மூவொரு கடவுளாகக் கண்டு அல்லவா திருக்குறள் கடவுளை வாழ்த்துகிறது ! மக்களைச் சமமாகக் கருதாமல், ஐவகைச் சாதிகளை வகைப்படுத்தி, அவர்களுள்ளும் ஏற்றத் தாழ்வு கற்பித்து "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்னும் தமிழர் கொள்கைக்கு மாறுபட்ட வருணாசிரமத்தைப் போதிக்கும் ஆரியரின் சிந்தனைக்கு மாறுபட்டதல்லவா வள்ளுவம்? அதனாலன்றோ, மனோன்மணீயம் சுந்தரனார்,

"வள்ளுவர்செய் திருக்குறளை மறுவறதன் குணர்ந்தோர்கள்
உள்ளுவரோ மநுவாதி ஒருகுலத்துக் கொருநீதி?"

என்று கேள்விக்கணை தொடுக்கின்றார். 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்பதுதானே வள்ளுவம்? ஒருவர் செய்கின்ற தொழிலினாற்கூட மக்களிடையே வேற்றுமை பாராட்டக் கூடாது

என்பது குறள் கூறும் அறம். இக்குறட்பாவை நுணுகி நோக்கும் போது சாதி ஏற்றத்தாழ்வுக் கொள்கை உருவாகு முன்னே இது திருவள்ளுவரால் எழுதப்பட்டது என்பது புலனாகும்.

அடுத்து ஒரு கருத்தையும் சீர்தூக்கிப் பார்க்கலாம். நால் வேதம் என்பது ஆரியரின் நால் வேதத்தைத் தான் குறிக்கிறது என்பதற்கு நூலில் எவ்வித அகச் சான்றுமில்லை ! புறச் சான்றுமில்லை !

‘வித்’ என்னும் சமற்கிருத வேரிலிருந்து பிறந்ததுதான் வேதம் அல்லது அறிவு – என்று இதுகாறும் சொல்லி வந்த கருத்தும் இன்று அறிஞரால் மறுக்கப் படுகிறது. ‘வித்து’ ‘விதை’ ‘வித்தை’ போன்ற தமிழ்ச் சொற்களிலிருந்தே ‘வேதம்’ என்னும் சொல் உருவாயிற்று என்று இப்போது காட்டப்பெறுகிறது. வித்து என்பது விளைவதற்குத் தேவையான கரு–வித்தை என்பது அறிவை வெளிக்கொணரத் துணை நிற்கும் கல்வி. வித்தை என்னும் தமிழ்ச் சொல்லே வேதம் எனத் திரிந்தது என்பர்.

தொடக்கத்தில் ஆரியருக்கு இருந்தது. ஒரே ஒரு வேதம் தான். அது பழைய வேதமாகக் கருதப்படும் இருக்கு (ரிக்) வேதம் ஆகும். ஏக வேதமாக இருந்த இருக்கு, பின்னர் யசூர், சாமம் ஆக பிரிவுபடுத்தப்பட்டு மூவேதங்களாயின. இதனை ‘வேதத் திரயி’ என்று குறிப்பிடுவர். அதன்பின்னர் பில்லி சூனியம், ஏவல், சாவிப்பு மந்திரங்களென, வேதம் என்னும் தகுதிக்கு ஒவ்வாத மந்திரங்களை உள்ளடக்கிய அதர்வண வேதம் உருவாக்கப்பட்டது. இதன்பிறகே நால் வேதங்கள் என்னும் வழக்குத் தோன்றிது. இவ்வழக்குத் தோன்றிய காலத்திற்குப் பல ஆண்டுகளுக்கு முன்னரே திருக்குறள் இயற்றப்பட்டது.

மேலும் வேதங்கள் சமற்கிருத மொழியில் இன்று காணக்கிடக்கின்றன. வேதங்கள் வழங்கப்பட்ட மொழியை வேதமொழி என்று அறிஞர் குறிப்பிடுகின்றனர். இதற்கு வரி வடிவமாகிய எழுத்துருவம் கிடையாது. பிற்காலத்தில் சமற்கிருத மொழியில் வேதங்கள் எழுதப்பட்டன. சமற்கிருதம் உருவான காலம் கி.பி. 2 ஆம் நூற்றாண்டு, அது கல்வெட்டு மொழியாக மிகுதியும் பயன்படுத்தப்பட்ட காலம் கி.பி. 4 ஆம் நூற்றாண்டிற்குப் பிறகே என அறிஞர் உறுதி செய்துள்ளனர். கல்வெட்டுகளில் மிகுதியும் பயன்பட்ட சமற்கிருதம், இலக்கிய மொழியாகப் பரிணமித்தது. இன்னும் சில காலம் கழிந்த பிறகே என்பர். சமற்கிருதம் காலத்தில் பிற்பட்ட மொழியாகும். எனவே கி.பி. 4ஆம் நூற்றாண்டிற்குப்பின் சில நூற்றாண்டுகளில் எழுதப்பட்ட வேதங்களின் சாரமாகத் திருக்குறள் விளங்குகிறது எனக் கூறுவது நகைப்பிற்குரியதாகும். ஆகவே நால் வேதம் என்று குறிக்கப்படுவது வேறு ஒரு மறை ஆகலாம்.

எது நான்மறை ?

கிறித்தவர்களின் திருமறையாகிய புதிய ஏற்பாட்டை **(New Testament)** நான்கு பகுதிகளை உள்ளடக்கியதாக இறையியலாளர் சுட்டிக் காட்டுகின்றனர். புதிய ஏற்பாட்டில் மொத்தம் 27 நூல்கள் உள்ளன. கடந்த 1600 ஆண்டுகளாக இந்த இருபத்தேழு நூல்களும் புதிய ஏற்பாட்டில் உள்ளவை என்று கிறித்தவர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. பழைய ஏற்பாட்டு நூல்களின்

எண்ணிக்கையைப் பொறுத்த அளவில் கத்தோலிக்கச் கிறித்தவர்க்கும் சீர்திருத்தக் கிறித்தவர்க்கும் வேறுபாடு உண்டு. ஆனால் புதிய ஏற்பாட்டில் உள்ள 27 நூல்களைப் பொறுத்தவரை இவ்விருவருக்கும் வேறுபாடு இல்லை. புதிய ஏற்பாடு நான்கு பகுதிகளை உள்ளடக்கியது. அவையாவன :

1. நான்கு நற்செய்தி நூல்கள் **(Four Gospels)**
2. திருத்தூதர் பணி **(Acts of the Apostles)**
3. திருத்தூதர் எழுதிய 21 திருமுகங்கள் **(21 Letters written by Apostles and Apostolic men)**
4. திருவெளிப்பாடு **(Revelation)**

பழைய ஏற்பாடும் புதிய ஏற்பாடும் இணைந்து திருவிவிலியம் அல்லது திருமறை என வழங்கப்படுகிறது. பழைய ஏற்பாட்டு நூல்களை மூன்று பகுதிகளாகவும் புதிய ஏற்பாடு முழுமையையும் ஒரு பகுதியாகவும் இணைத்து நான்மறையாகவும் இவற்றைக் குறிப்பிடலாம். பழைய ஏற்பாட்டு நூல்களை,

1. தோரா **(Torah)** – சட்ட நூல்கள்
2. நபீம் **(Nabim)** – இறைவாக்கினர் (தீர்க்கர்)
3. கெதூபீம் **(Kethubim)** – திருவெழுத்துக்கள்

எனப் வகைப்படுத்துகின்றனர். இம்மூன்று மறைகளோடு, இயேசு கிறித்துவின் மூலம் உலக மக்களுக்கு அருளப்பட்ட மீட்பாகிய நற்செய்தியை மையமாகக் கொண்ட புதிய ஏற்பாட்டையும் சேர்த்துப் பார்த்தால் இது நான்மறை என்று விளங்கும். பழைய ஏற்பாட்டைத் ‘தௌராத்’ **(Tawrat)** என்றும் புதிய ஏற்பாட்டை ‘இஞ்சில்’ **(Injil)** என்றும் – இவையிரண்டும் இறைவனால் வெளிப்படுத்தப்பட்டவை என்று திருக்குர் ஆன் – சூரா. 3 – குறிப்பிடுகிறது. எனவே, பழைய ஏற்பாடு மூன்று + புதிய ஏற்பாடு – ஒன்று – ஆக நான்கு மறை எனலாம். புதிய ஏற்பாடு ஒன்றையே எடுத்துக் கொண்டாலும், அது நான்கு பகுதிகளாகப் பகுக்கப்படுவதால் இதனை நான்மறை எனவும் குறிப்பிடலாம்.

கடவுள் ஒருவரே ; அவர் மூவொருவராகத் திகழ்கிறார். அவர் இந்நிலவுகில் மனிதராகப் பிறந்தார். மக்களின் பாவங்களுக்காக அவர் பலியானர் ; அவரை நம்பி ஏற்றுக் கொள்பவருக்கு மீட்பும் நீடுவாழ்வும் உண்டு என்பன கிறித்தவம், சைவம், வைணம் முதலிய சமயங்களின் அடிப்படைக் கோட்பாடுகள். இக்கோட்பாடுகளை பழைய ஆரிய வேதங்களில் காண இயலாது. பிரசாபதியின் பலி பற்றிய செய்தி இருக்கு வேதம் பத்தாம் மண்டலத்தில் கூறப்படுகிறது. கிறித்துவின் பலியைப் பற்றி இது கூறுகிறது. ஆனால், இப்பகுதி பிற்காலத்தில் ஆரிய வேதத்தில் சேர்க்கப்பட்டது என்பதை அறிஞர் எடுத்துக் காட்டியுள்ளனர். இன்னும் வேறு காரணங்களையும் சுட்டிக் காட்டலாம். திருக்குறளுக்கும் ஆரியரின் நால் வேதங்களுக்கும் தொடர்பில்லை என்பதை மட்டும் இங்குச் சுட்டிக்காட்டலாம். திருக்குறளின் உள்ளடக்கமும் கிறித்தவரின் திருமறையின் உள்ளடக்கமும் ஒன்று

போல் அமைந்துள்ளதை ஏராளமான அறிஞர் தம் ஆய்வு நூல்களில் தெளிவு படுத்தியுள்ளனர். எனவே கிறித்தவத் திருமறையை நான்மறை என்று குறிப்பிடலாம்.

திருக்குறளின் காலம்

திருவள்ளுவரின் காலத்தை உணர்த்துவதற்குரிய வரலாற்றுச் சான்றுகள் போதிய அளவில் இல்லை எனலாம். திருவள்ளுவர் பற்றிய பாரம்பரியக் கதைகளும் மரபான செய்திகளும் ஆங்காங்கே சொல்லப்பட்டு வருகின்றன. அத்தகைய செய்திகள் திருவள்ளுவமாலை, கபிலர் அகவல், புலவர் புராணம், ஞானாமிர்தம், தமிழ் நாவலர் சரிதை முதலியவற்றில் கிடைக்கின்றன. அவற்றையெல்லாம் அப்படியே ஏற்றுக் கொள்ள இயலாதென அறிஞர் குறிப்பிடுகின்றனர். பல ஏதுக்களை எடுத்துக்காட்டித் திருவள்ளுவர் கி.பி. 2ஆம் நூற்றாண்டின் இறுதியிலோ கி.பி. 3ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலோ திருவள்ளுவர் வாழ்ந்திருக்கலாம் என மா. இராசமாணிக்கனார் குறிப்பிடுகிறார் (திருக்குறள் ஆராய்ச்சிப் பதிப்பு, ப.ஆ : கி.வா.ஜ., இராமகிருஷ்ண மிஷன் வித்யாலயம், கோயம்புத்தூர், 1963, 2ஆம் பதி. 2004, ப.163).

தமிழ் நாட்டரசு திருவள்ளுவரை கி.மு. 31ஆம் ஆண்டினர் எனக் கொண்டு திருவள்ளுவராண்டை அறிவித்துள்ளது. அவர் கி.மு. 31இல் பிறந்திருந்தாலும் கி.பி. முதலாம் நூற்றாண்டிலும் அவர் வாழ்ந்திருக்க அதிக வாய்ப்புகளுண்டு. யாண்டு பலவாக நரைதிரையின்றி வாழ்ந்த பிசிராந்தையார் போன்று பெருகிய வாணாட்களையுடைவராகத் திருவள்ளுவர் வாழ்ந்திருக்க வேண்டும். இதற்கு 'மருந்து' என்னும் திருவள்ளுவரின் அதிகார வைப்பே போதிய சான்றாகும்.

திருக்குறட் பாயிரவியலுக்கு முன்னுரை வழங்கும் பரிமேலழகர், "மூன்றாகிய உறுதிப்பொருட்டு அவற்றான் மூவராகிய முதற்கடவுளோடு இயைபு உண்டாகலான், அம்மூன்று பொருளையும் கூறலுற்றார்க்கு அம்மூவரையும் வாழ்த்துதல் முறைமையாகலின் இவ்வாழ்த்து அம்மூவர்க்கும் பொதுப்படக் கூறினார் என்று உணர்க" எனக் குறிப்பிடுகிறார். 'மூவொரு கடவுள்', 'மும்மூர்த்தி' என்னும் கோட்பாடு கிறித்துவுக்கு முற்பட்ட காலத்தில் உருவாகவில்லை. அது கிறித்துவூழிக் காலத்தில், கிறித்துவுக்குப் பிற்பட்ட காலங்களிலேயே உருவானது என்பது சமயக் கணக்கர் தரும் வரலாற்று முடிவுரை ஆகும்.

மேலும் கடவுள் வாழ்த்து – ஆறாம் குறப்பாவில் இடம்பெறும் 'ஐந்தவித்தான்' என்னும் பெயர் இயேசு பெருமானுக்கு மட்டுமே பொருந்தும் என அறிஞர் மு. தெய்வநாயகம் ஆய்வு செய்து முடிவு தருகிறார்.

சங்க இலக்கியத்தில் இறைவன் என்ற சொல் அரசனைக் குறிக்கப் பயன்பட்டது. ஆனால் திருவள்ளுவர் அச் சொல்லைக் கடவுளுக்கு முதன் முதலாகப் பயன்படுத்துகிறார். இறைவன் (குறள், 5, 10) எனக் 'கடவுள் வாழ்த்து' என்னும் அதிகாரத்தில் இரண்டு இடங்களில் பயன்படுத்துகிறார். கடவுளை அரசனாகக் காணும் மரபு கிறித்தவ மரபாகும். இது பின்னர் விளக்கப்படும்.

மேலும் திருக்குறளின் மொத்தக் கருத்தோட்டமும் கிறித்து ஊழிக்குப் பிற்பட்டதாக விளங்குகிறது. தோமையரையும், திருவள்ளுவரையும் இணைத்து ஏராளமாக ஆய்வுக் கருத்துகள் இன்று அறிஞர் பெருமக்களால் வெளியிடப்பட்டுள்ளன. எனவே திருவள்ளுவர் கி.பி. முதலாம் நூற்றாண்டில் அல்லது கி.பி. முதலாம் நூற்றாண்டின் இறுதியிலும் கி.பி. 2ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் வாழ்ந்தவராகக் கொள்ளுவது பொருத்தமுடையதாகலாம்.

சான்றோர் சமயம்

கல்வி, கேள்வி, ஒழுக்கம் முதலியவற்றில் தேறி, பிறருக்குச் சான்றாய் விளங்கியோரைச் சான்றோர் எனக் கூறிய வழக்கு சங்க காலத்தில் இருந்தது. உயர்ந்தோர், நல்லவர், சிறந்தோர் என்னும் பொருள்களில் சான்றோர் என்னும் சொல் வழங்கியது.

‘ஆன்றவிந் தடங்கிய கொள்ளைச் சான்றோர்’ – புறம். 191
‘சான்றோர் சென்ற நெறி’ (புறம். 134)

‘பிறர்நோயும் தந்நோய் போல் போற்றி
அறனறிதல் சான்றவர்க் கெல்லாம் கடன்’ – கலித்தொகை, 139

போன்ற சங்கப் பனுவல்களில் பயின்றுவரும் ‘சான்றோர்’ என்பது கொள்கையால் இணைந்த ஒரு கூட்டத்தாரைக் குறிக்கும் சொல்லாக விளங்கியது என்று அறிஞர் குறிப்பிடுவது நோக்கற்பாலது.

தொண்டை நாட்டின் சிறப்பை விளக்க வந்த ஒளவையார், சான்றோர் நிரம்பி இருந்ததாலே தொண்டை நாடு சிறப்புற்றது என்று பாடுகிறார்.

“வேழ முடைத்து மலைநாடு மேதக்க
சோழ வளநாடு சோறுடைத்து – பூழியர் கோன்
தென்னாடு முத்துடைத்துத் தெண்ணீர் வயல் தொண்டை
நன்னாடு சான்றோ ருடைத்து”

என வரும் வெண்பாவில், வேழத்தினால் சேர நாட்டுக்குச் சிறப்பு வருகிறது ; சோற்றை விளைவிக்கும் தண்ணீரால் சோழநாட்டுக்குச் சிறப்பு வருகிறது ; முத்து விளைவதால் பாண்டிய நாட்டுக்குச் சிறப்பு வருகிறது ; சான்றோர் நிரம்ப இருந்ததாலே தொண்டை நாட்டுக்குச் சிறப்பு வருகிறது என்பது ஒளவையார் பாடலின் கருத்தாகும். சான்றோர் என்பது உயர்ந்தோர் என்னும் பொருளில் இங்கு ஆளப்பெறாமல் ஒரு கொள்ளையைத் தமதாகக் கொண்ட தொகுதியினரைக் குறித்ததென அறிஞர் எடுத்துக் காட்டுவது ஆய்வுக் குரியதாகும்.

சான்று பகர்வோர் அல்லது சான்றாளராக விளங்குவோரைச் சான்றோர் எனக் கூறுவது பொருத்தமுடையதெனக் கொள்ளலாம். இயேசு பெருமான் சாவை வென்று, உயிர்த்தெழுந்து நாற்பது நாட்களளவும் தம் மாணாக்கர்க்குத் தோன்றி இறையாட்சியைப் பற்றிக் கற்பித்தார் (திருத்தூதர் பணிகள் 1:3). பிறகு அவர் விண்ணேற்றமடையும் போது,

"தூய ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள்
கடவுளது வல்லமையைப் பெற்று எருசலேமிலும்
யூதேயா, சமாரியா முழுவதிலும் உலகின் கடை
எல்லை வரைக்கும் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்"

– திருத்தூதர் பணிகள் 1:8

என்று கூறினார். இதிலுள்ள சாட்சி என்னும் பிற மொழிச் சொல்லுக்குச் சான்று, சான்றார், சான்றோர் எனத் தமிழில் சுட்டிக் காட்டலாம்.

தொடக்கக் காலத்தில் இயேசு பெருமானின் அருட் தொண்டராயும் மாணாக்கராயும் இருந்தவர்களே 'சாட்சிகள்' என அழைக்கப்பட்டனர். அதாவது, கிறித்துவைப் பின்பற்றியவர்கட்குத் கொடுக்கப்பட்ட பெயர் 'சாட்சிகள்' என்பது. அதன்பிறகு தான் இவர்களுக்குக் 'கிறித்தவர்' என்னும் பெயர் சுட்டப்படுகிறது. அதுவும் முதன்முதலில் அந்தியோகியாவிலே தான் கிறித்தவர்கள் என்னும் பெயர் வழங்கப்பட்டது (திருத்தூதர் பணிகள் 11:26).

பேதுரு, பவுல் முதலான திருத்தொண்டர் ஐரோப்பா, பாலத்தீனம் போன்ற பகுதிகளில் ஊழியம் செய்வதற்கு முந்திய காலங்களிலே கிறித்தவம் இந்தியாவில் பரவத் தொடங்கியது என்பர். அதாவது, கிறித்தவர் என்ற பெயர் தோன்றுவதற்கு முன்பே கிறித்துவின் நற்செய்தி இந்தியாவிற்கு வந்துவிட்டது. எனவே, இயேசு பெருமானின் நற்செய்தியைக் கேட்டறிந்து, அவர் கொள்கையை ஏற்றுக்கொண்ட தமிழகத்திலிருந்த மக்களுக்குச் சான்றோர் என்ற பெயர் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும் ; அல்லது சான்றோர் என்ற பெயரால் அறியப்பட்டிருக்க வேண்டும் என்பர். அன்னாரின் சமய நூலாகத் திருக்குறள் விளங்கியிருக்க வேண்டும் என்பது அறிஞரின் துணிவு. அந்தக் கண்கொண்டு திருக்குறளை நோக்கும் போது திருக்குறளின் அமைப்பும் அதிகார வைப்பு முறைகளும் திருமறைக்குரிய பண்புகளோடு திருக்குறள் இலங்குவதை உணர முடியும்.

திருக்குறளின் அமைப்பு

முழுவதும் குறள் வெண்பாக்களால் இயற்றப்பட்ட முதல் நூல் திருக்குறள் ஆகும். இது மூன்று பகுதிகளாகப் பகுக்கப்பட்டுள்ளது. பகுதி என்பதைப் 'பால்' என்னும் சொல்லால் திருவள்ளுவர் குறிப்பிடுகின்றார். இதனால் தான் திருக்குறளுக்கு 'முப்பால்' என்று பெயர் வந்தது. அம் மூன்று பகுதிகளாவன :

1. அறத்துப் பால்
2. பொருட் பால்
3. இன்பத்துப் பால்

'அறம் பொருள் இன்பம் வீடடைதல் நூற்பயனே' என்னும் இலக்கணத்திற்கு இலக்கியமாய்த் திகழ்வது திருக்குறள். வீடு பேற்றைப் பற்றிக் குறிப்பிடும் தனிப்பால் திருக்குறளில் இல்லை. ஆனாலும் இந்நூலில் வீடுபேறு விளக்கப்படுகிறது என்பதை அறிஞர் அனைவருமே ஒப்புக் கொண்டுள்ளனர்.

திருக்குறளில் 133 அதிகாரங்கள் உள்ளன. ஓர் அதிகாரத்திற்குப் பத்துக் குறட்பாக்கள் வீதம் நூலில் மொத்தம் 1330 குறட்பாக்கள் உள்ளன. அறத்துப்பாலில் பாயிரம், இல்லறவியல், துறவறவியல், ஊழியல் என்னும் நான்கு பகுதிகளும் பொருட் பாலில் அரசியல், அமைச்சியல், அரணியல், கூழியல், படையியல், நட்பியல், குடியியல் என்னும் ஏழு பகுதிகளும் இன்பத்துப்பாலில் களவியல், கற்பியல் என்னும் இரண்டு பகுதிகளும் அடங்கியுள்ளன.

1. அறத்துப்பால்

| | பகுதி | அதிகாரங்கள் | குறட்பாக்கள் |
|---|---|---|---|
| (அ) | பாயிரம் | 4 | 40 |
| (ஆ) | இல்லறவியல் | 20 | 200 |
| (இ) | துறவறவியல் | 13 | 130 |
| (ஈ) | ஊழியல் | 1 | 10 |

2. பொருட்பால்

| பகுதி | அதிகாரங்கள் | குறப்பாக்கள் |
|---|---|---|
| (அ) அரசியல் | 25 | 250 |
| (ஆ) அமைச்சியல் | 10 | 100 |
| (இ) அரணியல் | 2 | 20 |
| (ஈ) கூழியல் | 1 | 10 |
| (உ) படையியல் | 2 | 20 |
| (ஊ) நட்பியல் | 17 | 170 |
| (எ) குடியியல் | 13 | 130 |

3. இன்பத்துப் பால்

| | பகுதி | அதிகாரங்கள் | குறட்பாக்கள் |
|---|---|---|---|
| (அ) | களவியல் | 7 | 70 |
| (ஆ) | கற்பியல் | 18 | 180 |

கூட்டுத் தொகை 1330

திருவள்ளுவர் காலச் சமயப் பின்னணி :

கிறித்துவுக்கு முன்னர் இந்தியாவில் வழக்கிலிருந்த சமயங்கள் பௌத்தமும் சமணமும் ஆகிய இரு சமயங்கள் தாம். இவை இரண்டும் கடவுளை ஏற்காத அல்லது கடவுள் மறுப்புக் கோட்பாட்டுச் (நாத்திக) சமயங்களாகும். இந்து சமயம் என்பது கிறித்துவுக்கு முன்னர் வழக்கில் இல்லை. அப்போது திராவிட இனத்தவரின் சிறு தெய்வ வழிபாடுகள் இருந்து வந்தன. தமிழ் இலக்கியங்களில் மிகப் பழமையாகக் கருதப்படும் சங்க இலக்கியங்களில் கூட சிவன், சைவம், விஷ்ணு, வைணவம் என்னும் பெயர்கள் காணப் பெறவில்லை. கி.பி. 7ஆம் நூற்றாண்டளவில் முகிழ்த்த தமிழ்ப் பக்தி இயக்கத்தின் பயனாய்த் தோன்றியவை சைவ, வைணவ சமயங்களை உள்ளிட்ட அறுவகைச் சமயங்கள் ஆகும். அக்காலக் கட்டத்தில் ஆரிய வேதங்கள் எழுதப்பட்டுத் தொகுக்கப்பபடவில்லை.

ஆனால் கிறித்துவின் நற்செய்தி கி.பி. முதலாம் நூற்றாண்டிலேயே இந்தியாவிற்கு வந்து விட்டது. இதற்கு அக்காலக் கட்டத்தில் வழக்கத்திலிருந்த கடல்வழிப் போக்குவரத்தும் தரைவழிப் போக்குவரத்தும் காரணமாயிருந்தன. அவற்றின் மூலம் கிறித்தவம் இந்தியாவில் பரவியிருந்த போதிலும், நீங்கள் உலகெங்கும் சென்று படைப்புகள் அனைத்திற்கும் நற்செய்தியை அறிவியுங்கள் என்ற இயேசு பெருமானின் பெருங்கட்டளையைத் தலைமேற் கொண்டு இந்தியாவிற்குக் கி.பி. 49 ஆம் ஆண்டிலே நற்செய்திப் பணி செய்வதையே நோக்கமாகக் கொண்டு வந்தவர் இயேசு பெருமானின் மாணாக்கர் தோமையர் ஆவார். அவர் வருகைக்குப் பின்னர்த் தான் தமிழ்ப் பக்தி இயக்கமும் அறுவகைச் சமயமும் தமிழகத்தில் தோன்றின. இவற்றுக்கு அடிப்படையாக இருந்தது இயேசு பெருமானின் பலிநிறைவேற்றத்தை மையமாகக் கொண்ட கடவுட் கோட்பாடுதான் காரணமாக இருந்தது என்பதை ஆய்வுகள் விளக்கிக் காட்டுகின்றன. சோழ மண்டலத்தில் தோமையர் பணியாற்றிய இடம் மயிலாப்பூர் என்று வரலாற்றுக் குறிப்புகள் பல தெரிவிக்கின்றன. தோமையரின் பேராலயத்திற்கு அருகிலேயே திருவள்ளுவர் கோயிலும் அமைந்திருக்கிறது. எனவே திருக்குறளின் கடவுட் கோட்பாட்டுக்கும் கிறித்தவக் கடவுட் கோட்பாட்டுக்கும் நெருங்கிய தொடர்பு காணப்படுவதில் வியப்பேதும் இல்லை.

திருக்குறளின் உட்கிடக்கை கிறித்தவமே !

குறள் காட்டும் சமயம் எது ? திருவள்ளுவரின் சமயம் எது ? என்பதைக் கண்டறிவதில் ஆர்வம் காட்டாத ஆய்வாளர் இலர் என்றே கூறிவிடலாம். திருக்குறளைச் சமண நூலாகக் காட்டும் ஆய்வுகள் உண்டு ; சைவ நூலாகக் காட்டுகள் ஆய்வுகள் உண்டு ; வைணவ நூலாகக் காட்டும் ஆய்வுகள் உண்டு ; கிறித்தவ நூலாகக் காட்டும் ஆய்வுகளும் உண்டு.

கடவுளை அடிப்படையாகக் கொண்டு திருக்குறளின் அறம் மாளிகையாகக் கட்டப்பட்டுள்ளது. சமண சமயத்தின் கடவுட் கோட்பாட்டுக்கும் திருக்குறளின் கடவுட் கோட்பாட்டுக்கும் எள்ளளவும் பொருத்தமில்லை. ஏற்கனவே குறிப்பிட்டது போல உலகைப் படைத்தோனாகவும் காத்து ஆளுகை செய்வோனாகவும் சமணம் கடவுளைச் சித்திரிப்பதுமில்லை ; கடவுள் தாம் எல்லாவற்றும் மேலான பரம் பொருள் என்பதை ஏற்பதுமில்லை. இது கடவுள் மறுப்பாளரின் நாத்திகக் கொள்கை. இவ்வுலகில் சமணக் கோட்பாடுகளைப் பிசகாமல் கைக் கொண்டு நற்காட்சி, நல்லொழுக்கம், நல் ஞானம் ஆகிய மும்மணிகளைக் கைக் கொண்டு, நன்மையும் செய்யாமல், தீமையும் செய்யாமல், பிறவித் தளையிலிருந்து விடுபடுகின்றவர் இவ்வுலகைக் கடந்து, துசிதலோகமடைகிறார் ; அவரே அருகர். அவரைக் கடவுளாக, அதாவது இவ்வுலகைக் கடந்தவராகக் காட்டுவதுதான் சமணம், இவ் அருகக் கடவுளை நோக்கி இப்பூவுகிலுள்ளோர் ஏறெடுக்கும் விண்ணப்பங்களோ ஜெபங்களோ அவரைச் சென்று சேருவதும் இல்லை ; அவற்றுக்கு அருகக் கடவுள் பதில் கொடுப்பதும் இல்லை என்று சர்வப் பள்ளி இராத கிருட்டிணன் குறிப்பிடுகிறார்.

சமணத்தின் அடிப்படையாகக் போன பிறவி, இந்தப் பிறவி, அடுத்த பிறவி ஆகிய கோட்பாடுகள் அமைந்துள்ளன. இந்தப் பிறவியில் ஒருவர் செய்யும் செயற்பாடுகளாகிய வினைகளே அவரது அடுத்த பிறவியை நிர்ணயிக்கிறது. ஒருவரது வினைக்கேற்ப அடுத்த பிறவியில் விலங்கு கதி, நரக கதி, மனித கதி, தேவ கதி ஆகியவற்றில் ஒன்றாக அவர் பிறவியெடுப்பார் என்பது சமணர்தம் கோட்பாடு.

திருக்குறளில் கையாளப்படும் நீத்தார், பிறவிப் பெருங்கடல், பிறவாழி, எழுபிறப்பு, ஊழ், பிறப்பறுக்கல் முதலான சொற்களை ஆதாரமாகக் கொண்டு, திருக்குறளைச் சமண நூலாகக் காட்டிய அறிஞர் பெருமக்கள் உண்டு. ஆனால் இச்சொற்களுக்கும் சமணக் கோட்பாட்டுக்கும் எவ்விதத் தொடர்புமில்லை ; இச் சொற்கள் கடவுட் கோட்பாட்டுச் சமயச் சொல்வாட்சியைச் சார்ந்தவை என்று இருபதாம் நூற்றாண்டின் இறுதிக் காலம் தொடங்கி நிகழ்த்தப்பட்டு வரும் ஆய்வுகள் மெய்ப்பித்துக் காட்டுகின்றன. கடவுட் சமயக் கோட்பாட்டுக்கும் பிறவிச் சுழற்சி அல்லது மறு பிறப்புக் கோட்பாட்டுக்கும் எவ்விதத் தொடர்புமில்லை. இவை ஆங்காங்கே, சுருக்கமாக, உரிய இடங்களில் விளக்கிக் காட்டப்படும்.

திருக்குறளைத் தமது சமயம் சார்ந்ததாகப் மிகுதியும் போட்டியிட்டவை சமணமும் சைவமும் எனலாம். சைவ சித்தாந்தமே திருக்குறளின் உட்கிடக்கை என்னும் கொள்கை பின்னர் மேலோங்கத் தொடங்கியது. ஆனால் இருபதாம் நூற்றாண்டில் எழுந்த கிறித்தவ ஆய்வுக்குப் பின்னர், திருக்குறளின் உட்கிடக்கை கிறித்தவமே என்னும் உண்மை மேலோங்கி நிற்கிறது என்பதை ஆய்வாளர் சிலர் குறிப்பிடுவது நோக்கத்தக்கது. தி.சு. சத்தியம் என்பார் தமது முனைவர்ப் பட்டத்திற்கான ‘இருபதாம் நூற்றாண்டில் திருக்குறள் ஆராய்ச்சியின் வளர்ச்சி’ என்னும் ஆய்வேட்டில்,

> “இருபதாம் நூற்றாண்டின் தொடக்கதில் திருக்குறளின் உட்கிடக்கை சைவ சித்தாந்தமே என்று எழுந்த ஆய்வுப் போக்கு, இன்றையக் காலக் கட்டத்தில் கிறித்தவமே திருக்குறளின் உட்கிடக்கை என்ற கருத்தப் போக்கைப் பெற்று முடிந்துள்ளது”

என்று 1979ஆம் ஆண்டில் தமது ஆய்வுக் கருத்தாக வெளிப்படுத்தியுள்ளார்.

மதுரைப் பல்கலைக் கழகத்தின் திருக்குறள் ஆய்வக வெளியீடான ‘திருக்குறளும் விவிலியமும்’ (1979) என்னும் நூலில்,

> “பொறிவாயில் ஐந்தவித்தான் என்னும் தொடரோ, கிறித்தவ இறையியற் கொள்கைக்கே மிக ஏற்புடையதாகும். அங்கு அது எவ்வித இடர்ப்பாடுமின்றிப் பொருந்தும்”

என்று முடிவு கூறுகிறார்.

‘ஐந்தவித்தான்’ என்னும் தொடர் இறைவனைக் குறிப்பதற்குத் திருவள்ளுவரால் இரண்டு இடங்களில் (குறள் 6 & 25) பயன்படுத்தப்படுகிறது. இயேசு கிறித்துவைக் குறிக்கும் தொடராக ‘ஐந்தவித்தான்’ என்னும் தொடர் விளங்குகிறது என்பது தான் இருபதாம் நூற்றாண்டின் இறுதியிலும் இந்நூற்றாண்டிலும் கண்டுணர்த்தப்படும் ஆய்வின் முடிபாகும். இது கடவுள் வாழ்த்திலும் (குறள் 6) நீத்தார் பெருமையிலும் (குறள், 25) இடம் பெறுகின்றன. எனவே இவ்விரண்டு இடங்களிலும் பயன்படுத்தப்படும் இறைவன் இயேசு கிறித்துதான் என்பதை நோக்க, திருக்குறள் ஒரு கிறித்தவ அறநூல் என்னும் உண்மை தெள்ளத் தெளிவாய்ப் புலனாகின்றது. பின்வரும் விளக்கங்களினாலும் இது மேலும் தெளிவாகும்.

திருக்குறட் பாயிரம்

நூலுக்கு முகம் போன்று அமைவது பாயிரம். நூல் எத்துணை சிறப்புடைய கருத்துகளைக் கொண்டு இலங்கிடினும் அதற்குப் பாயிரம் என்னும் ஒன்று தரப்படவில்லையாயின் அந்நூலைச் சிறப்புடையதாக அறிஞர் ஏற்றுக்கொள்வதில்லை.

'ஆயிரம் முகத்தான் அகன்ற தாயினும்
பாயிரம் இன்றேல் பனுவ லன்றே'

என்பது இலக்கணம். இதற்கேற்பத் திருக்குறளுக்குப் பாயிரம் என்னும் ஒன்றைத் திருவள்ளுவர் அமைத்துத் தந்துள்ளார்.

திருக்குறட் பாயிரம் குறித்து பல்வேறு கருத்துகள் சொல்லப்பட்டு வந்தன. பாயிரம் பற்றிய ஆய்வுகளும் பெருகின. வ.உ.சி. போன்ற அறிஞரின் கண்களுக்குத் திருக்குறட் பாயிரம் பிற்சேர்க்கையாகவே தோற்றமளித்தன. உரையாசிரியர் சிலரின் உரைகளே உண்மை என நம்பியதால் ஏற்பட்ட பிழையாகும் இது. பாயிரத்தையும் இணைத்துத் தான் திருவள்ளுவர் 1330 குறட்பாக்களால் ஆக்கப்பட்ட திருக்குறளை நூலாக யாத்திருக்கிறார் என்பதை,

''ஆயிரத்து முந்நூற்று முப்ப தருங்குறளும்
பாயிரத்தி னோடு பகர்ந்ததற்பின் – போய்ஒருத்தர்
வாய் கேட்க நூல் உளவோ மன்னு தமிழ்ப்புலவ
ராய்ந் கேட்க வீற்றிருக்க லாம்''

என்று நத்தத்தனார் என்னும் புலவர் திருவள்ளுவ மாலையில் பாடியுள்ளார்.

நன்னூலார் கூறும் பாயிர இலக்கண அமைதியின் படி திருக்குறட்பாயிரம் இதுவரை விளக்கப்படவில்லை. திருக்குறளின் முதல் நான்கு அதிகாரங்கள் பாயிரமாகக் கொள்ளப் படுகின்றன. இந்நான்கு அதிகாரங்களில் முதல் மூன்று அதிகாரங்களும் கடவுள் வாழ்த்தாகவும் நாலாம் அதிகாரம் செயப்படு பொருளாகவும் அமைந்திருக்கிறது என்பதை இக்கால அறிஞர் சிலர் விளக்கியுள்ளனர்.

'தெய்வ வணக்கமும் செயப்படு பொருளும்
எய்த உரைப்பது தற்சிறப் பாகும்'

என்னும் தற்சிறப்புப் பாயிர இலக்கணத்திற்கேற்பத் திருக்குறட் பாயிரம் அமைந்துள்ளது. இதில் முதல் மூன்று அதிகாரங்களும் கடவுள் வணக்கமாகவும் அதனை அடுத்த அதிகாரம் செயப்படு பொருளாகவும் அமைந்துள்ளது.

பாயிரம்

| கடவுள் வணக்கம் | செயப்படு பொருள் |
|---|---|
| 1. கடவுள் வாழ்த்து | 4. அறன் வலியுறுத்தல் |
| 2. வான் சிறப்பு | |
| 3. நீத்தார் பெருமை | |

திருவள்ளுவர் கடவுளை மூவொருவராகக் கொண்டு வாழ்த்துவது சிறப்பான கடவுட் கோட்பாடாகத் திகழ்கிறது. பின்வரும் பகுதியில் இதனைச் சற்றே சுருக்கமாகக் காணலாம்.

திருக்குறளில் மூவொருமை

மூவொருமை **(Trinity)** என்னும் கடவுட் கோட்பாடுதான் தமிழ் இலக்கியத்தில் முதன்முதலாகத் திருவள்ளுவரால் அறிமுகப்படுத்தப்படும் புரட்சிக் கருத்தாகும். கடவுள் ஒருவரே ; அவர் மூவராகச் செயல்படுகிறார். ஆயினும் மூன்று கடவுளல்லர் ; மூன்று பரிமாணங்களையுடைய ஒருவர்.

இந்த மூவொருமையை விளங்கிக் கொள்வது அத்துணை கடினமானது அன்று. ஒரே கடவுள் இவ்வுலகில் மனிதராகப் பிறந்தார். இதற்கு அவதாரம் என்று இறைநூலில் பெயர் கொடுக்கப்படுகிறது. பரசொரூபமாக இருக்கும் கடவுள், நில எல்லை, கால எல்லை, சிந்தனை மாத்திரை முதலான அனைத்து எல்லைகளையும் கடந்தவர். ஆனால் அவதாரமாக வந்த கடவுள் நில எல்லைக்கும் கால எல்லைக்கும் உட்பட்டவர். ஏனெனில் மாந்தனைப் போன்று உடலில் வெளிப்பட்டவர். உடலோடு கூடிய மாந்தன் பிறப்புக்கும் இறப்புக்கும் உட்படுவதைப் போன்று அவதாரக் கடவுளும் உட்படுகின்றார். உடலோடு கூடிய கடவுளின் செயல்பாடும் உடலற்ற பரசொருபியான கடவுளின் செயல்பாடும் பரிமாணமும் வேறானவை ஆகும். பரம், அபரமாக வருவது அவதாரம். இந்த இரண்டும் அல்லாத 'பராபரம்' மூன்றாவது நிலை, அதாவது, அருவமும் உருவமும் இணைந்த அருவுருவம் இதனை 'ஆவி' **(Spirit)**யாகக் குறிப்பிடுகிறது இறையியல். அருவுரு நிலையில் செயலாற்றும் கடவுளின் அருட்சக்தி மூன்றாவது பரிமாணம். உருவநிலையும் அருவுருவ நிலையும் அருவக் கடவுளின் வேறு வேறு வெளிப்பாடுகள். இம் மூவகையில் கடவுள் செயலாற்றினாலும் மூன்று கடவுளராக அல்லாமல் ஒரே கடவுளாக விளங்குகிறார்.

சூரியன் என்பது ஒரு பொருள். அதிலிருந்து வெப்பமும் வெளிச்சமும் வெளிப்படுகின்றன. வெப்பம் வேறான தன்மை கொண்டது ; வெளிச்சம் வேறான தன்மை கொண்டது. ஆனால் இருப்பது சூரியன் ஒன்று தான் செயற்பாட்டில் சூரியன், வெப்பம், வெளிச்சம் என மூன்றும் வெவ்வேறாய்க் காணப்பட்டாலும் மூன்றும் ஒரே பொருளின் வெளிப்பாடுகள் தாம். சூரியன் இன்றேல் வெப்பமும் இல்லை ; வெளிச்சமும் இல்லை. இதைப் போன்றது தான் மூவராகச் செயல்படும் ஒரே கடவுளும் ! மூவரும் ஒருவராகவும் ஒருவரே மூவராகவும் செயல்படுகிறார்கள் என்பதே மூவொரு கடவுட் தத்துவம்.

மூவொருமைக் கோட்பாட்டை முதன்முதலில் கிறித்தவ சமயத்தில்தான் காண்கிறோம். அதாவது, உலகப் பெருஞ்சமயங்களை ஆராய்ந்து பார்க்கின்றபோது மூவொருமைக் கோட்பாட்டைக் கிறித்தவ சமயம் தான் பிற சமயங்களுக்கு வழங்கியுள்ளது என்பதைக் காண்கிறோம். தமிழர் சமயமாகிய சைவத்திலும் வைணவத்திலும் மும்மூர்த்தி வழிபாட்டைத் தமிழ்ப் பக்தி இயக்கத்தின் வளர்நிலையாகக் காண்கிறோம். இது கி.பி. 7 ஆம் நூற்றாண்டில் உருவானதாகும்.

மாமல்லபுரம் கடற்கோயிலும் ஐந்து இரதங்களின் தர்மராசா ரதத்தின் நாற்புறங்களிலும் உள்ள எட்டு முனைகளிலும் செதுக்கப்பட்டுள்ள சிவனின் பல்வேறு தோற்றங்களிலும் மும்மூர்த்தியின் வழிபாட்டுத் தொடக்க நிலையைக் காணலாம். கடற்கரைக் கோயிலில், கீழ்ப்புறத்தில் பெரிய பட்டைச் சிவலிங்கம் சிவ வழிபாட்டையும், நடுப் பகுதியில் விஷ்ணுவின் கிடந்த கோலத்தில் வைணவ வழிபாட்டையும் மேற்புறத்தில் சோமாஸ்கந்த மூர்த்தியாகிய மூவொருமை வழிபாட்டையும் காணுகிறோம். சிவன், பக்கத்தில் சக்தி, மடியில் குழந்தையையும் சேர்த்த உருவமே சோமாஸ்கந்த மூர்த்தி உருவம். இது தந்தை, தாய், மகன் என்னும் நிலையின் தொடங்கி, சிவன், சக்தி, குமரன் என்னும் தனித் தனிச் சமயங்களாக வளர்ந்துள்ளன என்பதை விளக்குகிறது. மிகப் பழைய கோயிலாக இன்று விளங்கும் காஞ்சி கைலாயநாதர் கோயிலில் சோமாஸ்கந்த மூர்த்தி என்ற இறையியல் கோட்பாட்டை விளக்கும் நிலையை வரலாறு இன்னும் அறிவித்துக் கொண்டிருக்கிறது.

தமிழகத்தில் கி.பி. 7 ஆம் நூற்றாண்டளவில் தோன்றிய தமிழ்ப் பக்தி இயக்கத்திற்குத் திருக்குறள் உந்து சத்தியாகத் திகழ்ந்துள்ளது என்று அறிஞர்கள் சுட்டிக் காட்டியுள்ளார்கள். திருக்குறளில் மூவொரு கடவுள் வாழ்த்து அமைந்துள்ளமையை இதற்குச் சான்றாகக் கூறலாம். இதிலுள்ள முதல் மூன்று அதிகாரங்களும் மூவொரு கடவுளை வாழ்த்துகிறது என்பதைத் திருக்குறளுக்கு பாயிரவியலுக்கு முன்னுரையாக,

> “கவி தான் வழிபடும் கடவுளையாதல் வாழ்த்துதல், அவற்றுள் இவ்வாழ்த்து ஏற்புடைக் கடவுளை என உணர்க. என்னை ? சத்துவம் முதலிய குணங்களால் மூன்றாகிய உறுதிப் பொருட்டு, அவற்றான மூவராகிய முதற்கடவுளோடு இயைபு உண்டாகலான் இவ்வாழ்த்து அம்மூவர்க்கும் பொதுப்படக் கூறினார் என்று உணர்க”

என்று பரிமேலழகர் எழுதுவது சிந்தனைக்குரியது. ‘மூவராகிய முதற்கடவுள்’ எனப் பரிமேலழகர் குறிப்பிடுவது எந்தக் கோட்பாட்டை என ஆராய்ந்து பார்க்குமிடத்து அது மூவொருமைக் கோட்பாட்டையே விளக்குறிது என்பது தெளிவாக விளங்கும் கருத்தாகும்.

பரிமேலழகர் குறிப்பிடும் ‘முதற் கடவுள்’ என்னும் தொடர் ‘முதல்வனாகிய கடவுள்’ என விரியும். மூவர் என்பது அருவநிலை, உருவநிலை, அருவுருவ நிலை என்பதைக் குறிப்பிட்டு, இம்மூன்று நிலைகளில் செயலாற்றும் ஒரு கடவுளைக் குறித்தது என்க. அந்த ஒரு கடவுளை ‘மூவராகிய முதற் கடவுளர்’ என்று பன்மையில் குறிப்பிடுவது நோக்கத்தக்கது. கடவுள் ஒருவரே என்பதை முதற்கடவுள் என்னும் தொடரும் மூவர் என்பது முதற்கடவுளே மூவராகவும் விளங்குகிறார் என்றும் பரிமேலழகர் உரை வழி புலனாகின்றன.

திருவிவிலியத்தின் முதலாம் நூலாகிய தொடக்க நூலில் (ஆதியாகமம்) முதலாம் அதிகாரத்தில் முதலாம் வசனத்தின் தொடக்கத்தில், “கடவுள் விண்ணுலகையும் மண்ணுலகையும் படைத்த பொழுது”, என்று குறிக்கப்படுகிறது. பழைய மொழியாக்கத்தில் ‘ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்’ என வருகிறது. இதில் கடவுள் (தேவன்) என வரும் மூலமொழியாகிய

எபிரேயத்தில் பன்மைச் சொல்லாக அது ஆளப்படுகிறது எனவும் அது மூவொரு கடவுளாகிய 'திரித்துவத்'தைச் சுட்டி நிற்கிறது எனவும் இறையியலாளர் குறிப்பிடுகின்றனர். இதனை உட்கொண்டு திருவள்ளுவரும் தம் நூலின் முதல் குறட்பாவில் 'ஆதிபகவன்' என்று குறிப்பிடுவதாக அமைந்துள்ளது கருத்தில் கொள்ளத்தக்கது.

இயல்புடைய மூவர்

மூவொரு கடவுளை வேறோர் இடத்திலும் திருவள்ளுவர் ஆட்சி செய்கிறார். பாயிரவியல் முடிந்து, இல்லறவியலைத் தொடங்கும் திருவள்ளுவர் ஐந்தாம் அதிகாரமாகிய 'இல்வாழ்க்கை'யில் முதற் குறளாக,

"இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை" – குறள் 41.

என்று எழுதியுள்ளார். இக்குறட்பாவில் இடம்பொறும் 'இயல்புடைய மூவர்' என்னும் தொடர் இயல்பிலேயே அருவமாகவும், அவரிலிருந்து இவ்வுலகில் பிறந்த, உருவத்தில் வந்த கடவுள் – உருவமாகவும், இவர் தோற்றத்திற்குக் காரணமாகிய கடவுளின் அருட்சக்தியை அருவுருவமாகவும் திகழுகின்ற மூவொரு கடவுளை – இயல்புடைய மூவர் என்னும் பெயரால் திருவள்ளுவர் அழைக்கிறார் என்று அறிஞர் எடுத்துக் காட்டியுள்ளனர்.

கடவுளின் படைப்பாற்றலில் இல்வாழ்வான் துணையாகச் செயலாற்றுகிறான். கடவுளின் படைப்புகளில் சிகரமாக விளங்குபவர் முதலாம் மனிதனும் அவனது துணைவியும் தாம். முதலாம் மனிதனைத் தமது சாயலாகவே கடவுள் படைத்தார் என்று திருமறை குறிப்பிடுகிறது. கடவுளின் சாயல் என்பது இயேசு கிறித்துவின் சாயலாகும். ஏனெனில் இயசேு கிறித்துதான் உருவத்தில் வந்த கடவுள். மற்றப்படி அருவமாக விளங்கும் கடவுளுக்கு உருவம் இல்லையே ! உருவக் கடவுளின் தோற்றத்தை மனத்திற் கொண்டுதான் முதலாம் ஆதாம் உருவாக்கப்பட்டான். அதனால்தான் இயேசுவுக்கு இரண்டாம் ஆதாம் என்னும் பெயர் திருமறையில் சுட்டப்படுகிறது. ஆதாம், ஏவை ஆகியோர் மூலம் கடவுள் தமது சந்ததியை அல்லது தலைமுறையைப் பெருகப் பண்ணினார். அந்தத் தலைமுறைப் பெருக்கத்திற்கு நல்ல துணையாகத் திகழ்பவனே இல்வாழ்வான் என்று மேற்குறித்த குறளில் திருவள்ளுவர் குறிப்பிடுகிறார்.

திருவள்ளுவர் காலத்தில் குறிக்கப்பட்ட 'இயல்புடைய மூவர்' என்னும் பெயர் சுட்டப்படாத மூவொரு கடவுள், சமய நெறிக் காலத்தில் வேறு வேறு பெயர்களைப் பூண்டு, புராண விளக்கங்களில் வேறு வேறு நிலைகளில் வளர்ந்த தெனலாம். மும்மூர்த்தியாகச் சொல்லப்படுவன மூன்று கடவுளரைக் குறிக்காமல் மூன்று வழிகளில் அல்லது நிலைகளில் செயலாற்றும் ஒரே கடவுளைக் குறிக்கிறது எனல் பொருத்தமுடையதாகும். இனி, பாயிரத்தில் இடம் பெறும் மூவொரு கடவுளை வாழ்த்தும் முறையைப் பின்வரும் பகுதியில் சுருக்கமாக நோக்கலாம்.

## கடவுள் வாழ்த்து

திருக்குறளின் முதலதிகாரமாகிய கடவுள் வாழ்த்தில் ஒன்பது திருநாமங்களைத் திருவள்ளுவர் கடவுளுக்குச் சூட்டுகிறார். அவையாவன :

1. ஆதிபகவன் (1)
2. வாலறிவன் (2)
3. மலர்மிசை ஏகினான் (3)
4. வேண்டுதல் வேண்டாமை இலான் (4)
5. இறைவன் (5, 10)
6. ஐந்தவித்தான் (6)
7. தனக்கு உவமை இல்லாதான் (7)
8. அறவாழி அந்தணன் (8)
9. எண் குணத்தான் (9)

என்பன அவை.

### அகரம்

முதலாம் குறட்பா மிக ஆழமாகவும் மிக நுட்பமாகவும் திருவள்ளுவரால் ஆக்கப்பட்டுள்ளது. எழுத்துகளுக்கெல்லாம் அகரம் முதலாகவதாக உள்ளது. அதுபோல ஆதிபகவன் உலகிற்கு முதல்வனாக உள்ளான் என எடுத்துக்காட்டு உவமையால் விளக்குகிறார். அகர ஒசை, பிற உறுப்புகளின் துணையின்றிப் பிறப்பது ; ‘அகரம் அங்காந்தியலும்’ என்பது இலக்கணம். வாயைத் திறந்தவுடனே பிறக்கக்கூடிய ஒலியே அகரமாகும். நா, அண்ணம், பல், உதடு முதலான உறுப்புகளின் முயற்சி அகர ஓசை பிறப்பதற்குத் தேவையற்றது. அவ்வாறே உலக முதல்வனாகிய கடவுளும் எந்த ஒரு பொருளின் துணையின்றி இயங்குகிறார். அதாவது, எல்லாப் பொருள்களும் அவரிலிருந்தே தோன்றுகின்றன என்று பொருள். அவரே தொடக்கம், அவரே முடிவு !

கடவுளே அகரமாகவும் னகரமாகவும் விளங்குகின்றார் என்பது திருக்குறளின் உட்கோள். அதனால்தான், திருக்குறள் அகரத்தில் தொடங்கி (குறள், 1) னகரத்தில் (குறள், 1330) முடிகிறது. கடவுளே முதலும் முடிவுமானவர் என்பது இதன் கருத்து, கிறித்தவ மறையும், இயேசு கிறித்துவை ‘அல்பாவும் ஒமேகாவும்’ ஆக விளங்குபவர் என்று குறிப்பிடுகிறது. கிரேக்க மொழியின் முதலெழுத்து ‘அல்பா’, இறுதியெழுத்து ஒமேகா. புதிய ஏற்பாடு கிரேக்க மொழியில் எழுதப்பட்டதால், அம்மொழியின் எழுத்துமுறை ஆங்குக் குறிக்கப்பட்டதைப் போல, தமிழ்மொழியின் எழுத்திலக்கண அமைதியின் படி அகரமாகவும் னகரமாகவும் திருவள்ளுவரால் சுட்டப்படுகிறது எனக் கருதுவது பொருத்தமுடையது.

கடவுளை ஓங்காரமாகவும் ஓசையாகவும் குறிப்பிடுவது தமிழ் மரபாகும். ‘ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே’ என்றார் மாணிக்கவாசகர். வேதாந்தத்தில் பிரமனுக்கு ‘அக்ஷரம்’ என்று பெயர். அக்ஷரம் என்பதற்கு எழுத்து அல்லது வார்த்தை என்று பொருள் ஆகும்.

“ஆகாயம் வரை எல்லாவற்றையும்
தாங்குவதால் எழுத்து (அக்ஷரம்) பிரமனாகும்”

என்று பிரம சூத்திரம் (1.3.10) குறிப்பிடுகிறது. தமிழ் எழுத்திலக்கணத்தின்படி வரிவடிவத்திற்கு முந்தியது ஒலி வடிவம். சிந்தனை வடிவமே இவை இரண்டற்கும் முந்தியது என்றாலும் சிந்தனையின் வெளிப்பாடகத் திகழ்வன ஒலிவடிவும் வரிவடிவும் தாம். இவ்வாறு வெளிப்படாவிடின் ஒருவர் எதைச் சிந்திக்கிறார் என்பதே தெரியாதல்லவா ? எனவே, அகரத்தைக் கடவுளுக்கு உவமையாக்கினார் திருவள்ளுவர்.

ஆதிபகவன்

அடுத்து, ‘ஆதிபகவன்’ என்னும் தொடரின் உட்பொருளைக் காணலாம். ஆதி என்பதற்குத் தொடக்கம் அல்லது முதல் என்து பொருள் ஆகும். அண்ட பிண்டம், சராசரம் அனைத்துக்கும் மூலமானவன் ஆதிமூலம். கடவுளே அனைத்துக்கும் மூலகாரணர் ; நிமித்த காரணரும் அவரே. அவரிலிருந்தே பேரண்டத்திலுள்ள அனைத்தும் தோன்றின. அதனால்தான் பிரம சூத்திரம் கடவுளை ‘ஜன்மாதி’ (1.1.2) என்று குறிப்பிடுகிறது. இப்பேரண்டத்தின் பொருட்களின் தோற்றத்திற்கும் கடவுளே ஆதியானவர் என்பது பொருள். ‘பீஜம் மாம் சர்வ பூதானாம்’ என்று கீதை (7:10) நவில்கிறது. ‘உலகப் பொருட்கள் அனைத்திற்கும் நானே விதை (மூலம்) ; ஆதியாக விளக்குகிறேன்’ என்பது பொருள்.

திருவள்ளுவர் குறிப்பிடும் ஆதியும் பகவனும் வேறுவேறல்லர். ஒரே கடவுளை அவர் ‘ஆதிபகவன்’ எனக் குறிப்பிடுவது சிறப்புக்குரியது. ‘ஆதிபகவன்’ என்னும் தொடர் ஆதியாகிய பகவன் என விரியும். தமிழ் மொழி என்பதில் ‘தமிழ்’ என்பது சிறப்புப் பெயராகவும் ‘மொழி’ என்பது பொதுப் பெயராகவும் ஒட்டிநின்று பொருள் தருவது போல, ‘ஆதி’ என்னும் சிறப்புப் பெயரை ஒட்டிப் ‘பகவன்’ என்னும் பொதுப் பெயர் நின்று ஆதிபகவன் எனப் பொருளைச் சிறப்பித்து நிற்பது கருதத்தக்கது. ஆதிபகவன் என்பதற்கு இருபெயரொட்டுப் பண்புத் தொகை என்று பரிமேலழகரும் இலக்கணக் குறிப்புத் தருகிறார். முதற் குறட்பாவில் கடவுளே உலகப் படைப்புக்கு மூலமானவர் என்னும் கருத்தைத் திருக்குறள் நிலைநாட்டுகிறது. உலகப் படைப்பாளர் கடவுள் என்பதைத் திருவிவிலியத்தின் முதல் நூலாகிய தொடக்க நூலும் (ஆதியாகமம்) வேதாந்தமும் (உபநிடதம், பிரமசூத்திரம், கீதை) தமிழர் சமயமாகிய சைவத்தின் இறையியலாகிய சைவ சித்தாந்தமும் விளக்கிக் காட்டுவதைப் போலவே திருக்குறள் விளக்கிக் காட்டுகிறது. திருக்குறளுக்குப் பிற்பட்ட காலங்களில் உருவானவையே வேதாந்தமும் சித்தாந்தமும் என்பதை விளக்கத் தேவையில்லை. முதற் குறட்பாவின் வாயிலாகக் கடவுளின் படைத்தல் தொழில் கூறப்பட்டது.

பகவன்

‘பகவன்’ என்னும் பெயரும் சிந்தனைக்குரியது. இப்பெயர் சமற்கிருதத்திலிருந்து வந்தது என்பர் சிலர். வடநாட்டில் கடவுளைப் ‘பகவான்’ என்று வழங்குவதால், அதிலிருந்தே ‘பகவன்’ என்பதும் வந்திருக்க வேண்டும் என்ற கருத்தின் தொடர்ச்சியாக இது அமைந்திருக்கலாம். ஆனால் இச்சொல் தமிழச் சொல்லாகத் திகழ்கிறது. இதனை,

பகு + அவன் = பகவன்        பகு – பகுதி, அவன் – விகுதி

எனப் பகுத்துக்காட்டலாம். எனவே இது பகுபதம். தன்னை ஆதிமுதலே பகுத்து நிற்பவன் – பகவன் – என்னும் பொருளில் இது ஆளப்பட்டிருக்கலாம். பரம் – அபரம் – பராபரம் என்னும் முந்நிலைகளில் சைவம் விளக்கிக் காட்டுவதைப் போல 'பகவன்' என்பது மூவொருமையை விளக்கும் பெயராக அமைந்துள்ளது. தமிழர் சமயத்தில் தந்தை, மகன், அருட்சக்தி என விளக்குவதைப் போல இது அமைந்துள்ளது. இதையே கிறித்தவம் தந்தை, மகன், தூய ஆவி என்று குறிப்பிடுகிறது. எனவே மூவொரு கடவுளை வாழ்த்தியே திருவள்ளுவர் கடவுள் வாழ்த்தை முதற்குறட்பா மூலம் தொடங்கி வைக்கிறார் எனலாம்.

கடவுள் வாழ்த்தில் இடம் பெறும் பத்துக் குறட்பாக்களுமே மூவொரு கடவுளை வாழ்த்துவதாக அமைந்துள்ளன எனலாம்.

கடவுளுக்குத் திருவள்ளுவர் வழங்கும் ஒன்பது பெயர்களையும் வகைப்படுத்திக் காணலாம். ஆதி பகவன் (1) என்பது கடவுள் அநாதியானவர் என்பதையும் அவரே உலகப் படைப்பாளர் என்பதையும் விளக்குகின்றன. வாலறிவன் (2) என்பது, அவர் நிறைவான அறிவுடையவர் என்பதை விளக்குகிறது. வேண்டுதல் வேண்டாமை இலான் (4) என்பது கடவுள் நீதியரசர் என்பதையும் உலகின் நடுத்தீர்ப்பு நாளில் அவர் உலகோரை நியாயம் தீர்ப்பார் என்பதையும் விளக்குகிறது. இறைவன் என்னும் பெயர் இரண்டு குறட்பாக்களில் (5, 10) ஆளப்படுகின்றன. இது 'கிறிஸ்து' என்னும் பொருளைத் தமிழில் சுட்டுவதாக அமைந்துள்ளது. 'கிறிஸ்து' என்னும் கிரேக்கப் பெயர் அரசன் என்று பொருள்படும். இறைவன் என்பதும் அரசன் என்பதும் ஒரே பொருள் தருவன. ஐந்தவித்தான் (6) என்பது இயேசு பெருமானின் சிலுவைப் பலியை விளக்குகிறது. அவரே நீடு வாழ்வளிப்பவர் என்பதையும் இது தெளிவுபடுத்துகிறது.

தனக்குவமை இல்லாதான் (7) என்பது கடவுளின் பரத்துவத்தை விளக்குகிறது. அறவாழி அந்தணன் (8) என்பது, கடவுள் அறக் கடலாகவும் அருட் கடலாகவும் திகழ்கிறார் என விளக்குவதால் கடவுளின் பரத்துவத்தின் விளக்கமாக இப் பெயர் விளங்குகிறதெனலாம். எண் குணத்தான் (9) என்பதற்குத் தன்வயத்தனாதல், தூய உடம்பினனாதல், இயற்கையுணர்வினனாதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களின் நீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பில் இன்பம் உடைமை என சைவ சமயத்தில் கடவுளின் எண்குணங்களாகக் குறிக்கப்பட்டுள்ளன. இந்த எண் குணங்களையும் பகுத்துக்காணும் போது மூவொரு கடவுட் கோட்பாட்டை விளக்குவனவாகவே .........................,

இவற்றுள் தன்வயத்தனாதல், இயற்கையுணர்வினனாதல், முற்றுமுணர்தல், முடிவில் ஆற்றலுடைமை என்பன கடவுளின் பரத்துவநிலைப் பண்புகளை விளக்குவனவாக அமைந்துள்ளன. தூய உடம்பினனாதல், இயல்பாகவே பாசங்களிலிருந்து நீங்குதல் என்பன கடவுள் மாந்தனாக வந்த அபரநிலையை விளக்குகின்றன. பேரருள் உடைமை, வரம்பில் இன்பமுடைமை என்பன பராபரம் என்னும் தூய ஆவியாரின் தன்மைகளை விளக்குகின்றன.

| பரம் | அபரம் | பராபரம் |
|---|---|---|
| 1. தன்வயத்தனாதல் | 5. தூய உடம்பினன் ஆதல் | 7. பேரருள் உடைமை |
| 2. இயற்கை உணர்வினனாதல் | 6. இயல்பாகவே பாசங்களிலிருந்து நீங்குதல் | 8. வரம்பில் இன்பம் உடைமை |
| 3. முற்றுமுணர்தல் | | |
| 4. முடிவில் ஆற்றலுடைமை | | |

சத்து, சித்து, ஆனந்தம் இவை மூன்றும் சேர்ந்த சச்சிதானந்தமாக விளங்கும் மூவொரு கடவுளின் குணங்களாக இவற்றைக் கொள்ளலாம்.

இறைவன்

கடவுள் அருவநிலையை நீத்து உருவத்தில் வெளிப்பட்ட நிலையை இறைவன், ஐந்தவித்தான் என்னும் பெயர்களால் வாழ்த்துகிறார். முதலில் இறைவன் என்னும் சொல்லைப் பார்ப்போம். சங்கப் பனுவல்களில் இறைவன் என்னும் சொல் அரசனைக் குறிக்கப் பயன்பட்டது. இறைவன் என்னும் சொல்லை 5, 10, 690, 733 ஆகிய குறட்பாக்களில் திருவள்ளுவர் பயன்படுத்துகிறார். இவற்றுள் 5, 10 ஆகிய குறட்பாக்கள் நீங்கலாகவுள்ள 690, 733 ஆகிய குறட்பாக்களில் வரும் இறைவன் என்பது அரசனையே குறிக்கிறது. ஆனால் 5, 10 ஆகிய குறட்பாக்களில் மட்டும் அச்சொல் கடவுளைக் குறிக்கப்பயன் படுகிறது.

இதைப் போலவே ‘இறை’ என்னும் சொல்லை 388, 432, 436, 541, 547, 564, 733, 1157 ஆகிய குறட்பாக்களில் திருவள்ளுவர் ஆளுகிறார். இவற்றுள் 1157ஆம் குறளில் ‘இறை’ என்பது முன்னங்கை என்னும் பொருளில் வருகிறது. கடவுள் என்னும் பொருளில் 388 ஆம் குறளில் ஆட்சி செய்யப்படுகிறது. பிறவிடங்களிலெல்லாம் அரசன் என்னும் பொருளிலிலும் அரசனோடு தொடர்புடைய பொருளிலும் பயன்படுத்தப்படுகின்றன.

சங்கப் பனுவல் மரபினை ஒட்டியே ‘இறை’, ‘இறைவன்’ என்னும் சொற்களைத் திருவள்ளுவர் ஆட்சி செய்வதோடு, ‘கடவுள் வாழ்த்து’ என்னும் அதிகாரத்தில் அவர் கடவுளைச் சுட்டுவதற்குப் பயன்படுத்துகிறார். திருவள்ளுவர்தான் முதல்முதலில் ‘இறைவன்’ என்னும் சொல்லைக் கடவுளுக்குப் பயன்படுத்துகிறார். இதனை ஒரு புரட்சி என்றே சொல்லலாம். திருவள்ளுவரின் காலத்திற்குப் பிறகு, அவரைப் பின்பற்றி உலகியல் வழக்கிலும் செய்யுள் வழக்கிலும் இறைவன் என்னும் சொல்லைக் கடவுளுக்குச் சார்த்தி வழங்கலாயினர்.

முன்னர்க் குறிப்பிட்டதைப் போல, கடவுளை அரசன் என்று குறிப்பிடும் மரபு கிறித்தவத்திலிருந்து பெறப் பட்டதாகலாம். திருவிவிலியத்தின் பழைய ஏற்பாட்டுக் பகுதியில் மேசியா என்னும் எபிரேய மொழிப் பெயர் கடவுளுக்குக் குறிக்கப்படுகிறது. இதற்கு எண்ணெய் ஊற்றப்பட்டவர் என்று பொருள். அரசர், இறைவாக்கினர் (தீர்க்கதரிசி) சமய குரு முதலியோரைத் தெரிவு செய்து திருநிலைப் படுத்தும்போது, அன்னார் மீது எண்ணெய் ஊற்றித் திருப்பொழிவு செய்வது மரபு. மேசியா என்னும் எபிரேயச் சொல் புதிய ஏற்பாட்டில் கிரேக்க மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்டபோது ‘கிறிஸ்டாஸ்’ என ஆயிற்று. ‘கிறிஸ்டாஸ்’ என்பதற்கு எண்ணெய் வார்த்துப்

பிரித்தெடுக்கப்பட்ட அரசனைக் குறிக்கலாயிற்று. கிறிஸ்து என்பது கிறிஸ்டாஸ் என்பதன் ஒலி வழக்கு ஆகும். இதனைப் பின்பற்றியே திருவள்ளுவரும் கடவுளை இறைவன் என்னும் பெயரால் வழங்குகிறார். இறைவன் என்பதும் கிறிஸ்து என்பதும் ஒரே பொருளைத் தருகின்றன. அடுத்து திருவள்ளுவர் குறிப்பிடும் ஐந்தவித்தானை நோக்குவோம்.

ஐந்தவித்தான்

கடவுளை 'ஐந்தவித்தான்' என்னும் பெயர் சூட்டித் திருவள்ளுவர் வாழ்த்துகிறார். இப்பெயர் இரண்டு குறட்பாக்களில் ஆளப்படுகின்றன.

"பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்" – குறள், 6

"ஐந்தவித்தான் ஆற்றல் அகல் விசும்பு ளார்கோமான்
இந்திரனே சாலும் கரி" – குறள், 25

குறட்பா, 6 கடவுள் வாழ்த்து அதிகாரத்திலும் குறட்பா, 25 நீத்தார் பெருமையிலும் இடம் பெறுகின்றன.

'ஐந்தவித்தான்' என்பது கடவுளைக் குறிக்கிறதா ? உலகப் பற்றைந் துறந்த துறவியைக் குறிக்கிறதா ? இதற்கு உரையெழுதும் பரிமேலழகர், "பொறிவாயில் ஐந்து அவித்தான் – மெய், வாய், கண், மூக்குச் செவி யென்னும் பொறிகளை வழியாகவுடைய ஐந்தவாவினையும் அவித்தானது" என உரை காணுகின்றார். இவர் குறிப்பிடும் ஐம்புலன்களால் வரும் அவா என்பது சாதாரண மனிதருக்குப் பொருந்துமேயன்றிக் கடவுளுக்குப் பொருந்தாது. 'கடவுள் ஆசைகளை அடக்கினார்' என்று கூறுவது 'தெய்வக் குற்றம்' ஆகும்.

'ஐந்தவித்தான்' பற்றி அறிஞர் பலர் பல்வேறு கோணங்களில் ஆய்வு திகழ்த்தியிருக்கின்றனர். ஐந்தவித்தான் யார் என்பதற்குத் சரியான விடை காண இயலா நிலையில், திருவள்ளுவர் 'திருக்குறள் அறத்துப்பால் விருத்தியுரை' என்னும் நூலில் திருவள்ளுவர் பிற்காலமும் முந்திய உரையாசிரியர்கள் முற்காலமும் ஆகிய இடைக்காலத்துப் புலவர் ஒருவரால் பாடிச் சேர்க்கப்பட்டவை யென்றும் யான் கருதுகிறேன் என்று வ.உ.சி. குறிப்பிட்டுள்ளார். அதற்குரிய காரணங்களையும் ஆங்கு அவர் தருகிறார். உரையாசிரியர் சிலரின் கருத்தே உண்மை என்று நம்பியதன் விளைவாக நல்லறிஞம் ஒருவர்க்குத் திருக்குறட்பாயிரத்தின் மீது இவ்வாறு ஐயம் எழுந்தது எனக் க. நடேச உடையார் போன்ற அறிஞர் சிலரால் வ.உ.சி.க்குப் பதிலும் கொடுக்கப்பட்டது. மேலும் அவர், பொறிவாயில் ஐந்தவித்தான் என்னும் தொடர் தென்முகக் கடவுளாகிய (தட்சிணாமூர்த்தி) ஆலமர்ச் செல்வனையே குறிக்கும் என்றும் குறிப்பிடுகிறார்.

கடவுள் அருவ நிலையை நீத்து, ஐம்புலங்களையுடைய மனிதனாக வந்தார் என்னும் கருத்து இவர் கூற்றின் மூலம் தெளிவாகிறது. ஆலமரச் செல்வன் என்னும் தொடரில் ஆலம் என்பது நஞ்சையும் அமர் செல்வன் என்பது நஞ்சினை உண்டாலும், அதனை உண்டதால் வரும் சாவையும் மேற்கொண்டு அமர்ந்தவர், வென்றவர் என்னும் பொருளைத் தருவது நோக்கத்தக்கது.

ஐந்தவித்தான் என்பது ஐம்புலன்களும் அடங்கிய தமது உடலை அவித்தவன் என விரிகிறது. அவி என்னும் சொல்லுக்குப் பலி என்று பொருள். இது 'அவிப்பலி' என்றே தமிழில் வழங்கப்படுகிறது. சென்னைப் பல்கலைக் கழக வெளியீடாகிய தமிழ் அகராதியில் தேவர்க்குக் கொடுக்கும் உணவு என்று பொருள் கொடுக்கப்பட்டுள்ளது. தொல்காப்பியர் பொருளதிகாரத்தில், தொல்லுயிர் வழங்கிய அவிப்பலியானும் (தொல், பொருள் 76) என்று இலக்கணங் கூறுவது நோக்கத் தக்கது. எனவே ஐந்தவித்தான் என்பது – ஐம்புலன்களும் அடங்கிய தமது உடலைப் பலியாக்கியவன் – என்னும் பொருளைத் தருகிறது.

அப்படியானால் பொறிவாயில் என்றும் தொடர் குறிப்பிடுவதன் பொருள் யாது ? பொறி என்பது கருவியைக் குறிக்கும் சொல்லாகும். ஐந்தையும் எங்கே அவித்தான் என வினவினால், அதற்குப் பதில் பொறியில் என அமையும். ஒரு பொறியில் – பொறி வாயில் – தம் ஐம்புலன்களாலான உடலை அவித்தவன் – பலியாக்கியவன் என்னும் பொருள் இங்கு விடையாகக் கிடைக்கிறது.

ஐந்தவித்தான் யாரென்பதனை வரலாற்றில் நோக்கும் போது, அது இயேசு கிறித்துவையே குறிப்பிடுகிறது என்று அறிஞர் மெய்ப்பித்துள்ளனர். இயேசு சிலுவையில் அல்லவா பலியானார் ? பொறியில் என்பதைச் சிலுவையில் என்று திருவள்ளுவர் எழுதியிருக்கலாமே எனத் தடையெழுப்பலாம். சிலுவை என்பது தமிழ்ச் சொல் அன்று. அது வேற்று மொழிச் சொல். சிலுவையில் பலியிடும் வழக்கம் தமிழ்நாட்டிலும் இல்லை. அதனால்தான் திருவள்ளுவர், பொறிவாயில் எனப் பலிக் கருவியைத் தமிழில் குறிப்பிடுகிறார்.

ஐம்புலன்களை ஏற்றுப் பொறியொன்றில் பலியான கடவுள், பலிப் பொருளாய், இறந்து அழிந்து போனார் என்று எண்ணுபவர்க்கு, விடை பகரும் வகையில், ஐந்தவித்தான் ஆற்றல் பற்றி நீத்தார் பெருமையில் குறிப்பிடுகிறார். ஐந்தவித்தான் ஆற்றலுக்கு இந்திரனே சாலும் கரி – அதாவது இந்திரனே போதுமான சான்று – எனப் பதில் தருகிறார்.

இந்திரன் என்பதற்குத் தலைவன் என்று பொருள், உலகங்களுக்குத் தலைவன் லோகேந்திரன், அரசர்களுக்குத் தலைவன் இராசேசந்திரன் இப்படிப் பல. இங்கெல்லாம் இந்திரன் என்பது தலைவன் என்னும் பொருளிலே வருகிறது. திருக்குறளில் வரும் இந்திரன் வானவர் தூதர்களின் தலைவனைக் குறிக்கிறது. இது வரலாற்றில் இயேசு கிறித்து பலியாகி மூன்றாம் நாளில் உயிர்த் தெழுந்த வரலாற்று நிகழ்ச்சியைக் குறிக்கிறது. அவர் உயிர்த் தெழுந்ததற்குச் சான்றாக இருந்தவர் வானவர் தூதருக்கெல்லாம் தலைவர்.

இயேசுவின் உயிர்த் தெழுதல் பற்றி நற்செய்தி நூல்களில் இடம் பெறுகின்றன. மத்தேயு 28 : 2-7 ; மாற்கு 16:5-7 ; லூக்கா 24:3-7 ; யோவான் 20 : 11-13 ஆகிய பகுதிகளில் இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குச் சான்றாக நின்ற ஆண்டவரின் தூதர் பற்றிய நிகழ்ச்சி வரையப்பட்டுள்ளது.

> "தாம் சொன்னபடியே இயேசு உயிர்த் தெழுந்தார் ; உயிரோடிருக்கிறவரை
> இறந்தோரிடத்தில் தேடுகிறது என்ன ? நீங்கள் விரைந்து சென்று, இறந்த அவர்

உயிருடன் எழுப்பப்பட்டர் எனச் சீடருக்குக் கூறுங்கள். உங்களுக்கு முன்பாக அவர் கலிலேயாவுக்குப் போய்க் கொண்டிருக்கிறார். அங்கே நீங்கள் அவரைக் காண்பீர்கள்" எனத் தூதர் கூறிய பகுதிகள் நற்செய்தி நூல்களில் குறிப்பிடப்படுகின்றன. இப்பகுதிகளை விளக்குவதாகவே,

"ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு ளார்கோமான்
இந்திரனே சாலும் கரி"

என்னும் குறட்பா அமைந்துள்ளது.

எனவே கடவுள் வாழ்த்தில் குறிக்கப்படும் ஐந்தவித்தானும் நீத்தார் பெருமையில் குறிக்கப்படும் ஐந்தவித்தானும் ஒருவரே என்பதும் அவர் சிலுவையில் பலியாகி உயிர்த்தெழுந்த இயேசு கிறித்துவே என்பதும் தெள்ளிதின் புலப்படுகின்றன. ஆகவேதான், 'திருக்குறளும் விவிலியமும்' என்னும் மதுரை காமராசர் பல்கலைக் கழகத் திருக்குறள் ஆய்வக வெளியீட்டு நூலில், "பொறிவாயில் ஐந்தவித்தான் என்னும் தொடரோ, கிறிஸ்தவ இறையியற் கொள்கைக்கே மிக ஏற்புடையதாகும். அங்கு அது எவ்வித இடர்ப்பாடுமின்றிப் பொருந்தும்" (ப. 327) எனக் காமாட்சி சீனிவாசன் மிகத் தெளிவாகக் குறிப்பிடுகிறார். இவற்றை நோக்கும் போது, திருவள்ளுவர் வாழ்த்தும் கடவுள் ஐந்தவித்தானாகிய இயேசு கிறித்துவே என்பது அங்கை நெல்லியென விளங்கும்.

கடவுள் உருவத்தில் வந்தார் என்பதை விளக்குவதற்காக, ஐந்தவித்தான், இறைவன் ஆகிய இருபெயர்களைச் சூட்டித் திருவள்ளுவர் கடவுளை வாழ்த்துகிறார். அடுத்து அருட்சக்தியை விளக்குவதாக அமைந்துள்ள கடவுள் வாழ்த்துப் பகுதியை நோக்கலாம்.

அருவுருவக் கடவுள்

இறைவனின் அருட்சக்தியை அருவுருவமாகக் குறிப்பிடுவர். அருவமாகவும் உருவமாகவும் இணைந்து செயலாற்றும் அருட்சக்தியை அருவுருவம் என்பர். சக்தி என்பதை 'Spirit' என ஆங்கிலத்தில் குறிப்பர். இதனைத் தமிழில் ஆவி என்றும் சொல்லுவர். கிறித்தவம் ஆவியைத் தூய ஆவி என்று குறிப்பிடுகிறது. இத்தன்மையை விளக்குவதாக மலர்மிசை ஏகினான் என்னும் தொடர் (குறள், 3) விளக்குகிறது. இங்கு மலர் என்பது மலர் போன்ற இதயத்தை குறிக்கிறது. இதற்கு, 'அன்பான நினைவாரது உள்ளக் கமலத்தின் கண் அவர் நினைந்த வடிவோடு விரைந்து சேறலின் ஏகினானென இறந்த காலத்தாற் கூறினார்', எனப் பரிமேலழகரும் குறிப்பிடுகிறார். இதனை 'உள்ளுறைவோன்' என்று சமயநூல்கள் விளக்குகின்றன. இறைவன் உறையும் இதயத் தாமரையைப் 'பிரமாபுரம்' என்றும் 'தகராகாயம்' என்றும் வேதாந்தம் குறிப்பிடுகிறது. மலர் என்பதை இயேசுவின் தாயாகிய மரியாளைக் குறிப்பிடுகிறது என்றும் மலர் மிசை ஏகியவன் – மரியாளிடம் உதித்த இயேசு பொருமான் என்றும் அருட்திரு அருளப்பா ஓரிடத்துக் குறிப்பிடுவதும் ஈண்டு எண்ணத் தக்கது.

ஆகவே, திருக்குறளின் முதலதிகாரமாகிய கடவுள் வாழ்த்து என்னும் அதிகாரத்திலேயே கடவுள் மூவொருவராக விளங்குகிறார் என்பதைத் திருவள்ளுவர் குறிப்பிட்டுக் காட்டுவது சிறப்பிற்குரியதாக உள்ளது. இது தந்தை, மைந்தன், தூய ஆவியின் வாழ்த்தாக அமைந்துள்ளது என்பதனைக் கீழ்க்காணும் அட்டவனை தெளிவுபடுத்துகிறது.

| தந்தை | மகன் | தூய ஆவி |
|---|---|---|
| ஆதி பகவன் (1) | இறைவன் (5, 10) | மலர் மிசை ஏகினான் (3) |
| வாலறிவன் (2) | ஐந்தவித்தான் (6) | |
| வேண்டுதல் வேண்டாமை இலான் (4) | | |
| தனக்குவமை இல்லாதான் (7) | | |
| அறவாழி அந்தணன் (8) | | |
| எண்குணத்தான் (9) | | |

வான் சிறப்பு

பாயிரத்தின் இரண்டாம் அதிகாரம் வான் சிறப்பு ஆகும். இது கடவுள் வாழ்த்துக்கும் நீத்தார் பெருமைக்கும் இடையில் வைக்கப்பட்டுள்ளது. வான் சிறப்பு ஏன் பாயிரத்தில் இடம் பெறுகிறது என்ற வினாவினை அறிஞர் சிலர் எழுப்பி விடை கண்டுள்ளனர். வான் சிறப்பு என்பது மழையைச் சிறப்பித்துக் கூறுகிறது என்றே பரிமேலழகர் தொடங்கிப் பலரும் உரை கண்டுள்ளனர்.

ஏற்கனவே நாம் முன்பகுதியில் பார்த்தபடி பாயிரத்தின் முதல் மூன்று அதிகாரங்களுமே மூவொருவராக விளங்கும் கடவுள் வாழ்த்துப் பகுதிகள் ஆகும். எனவே இரண்டாம் அதிகாரம் மழையை வாழ்த்தவில்லை என்பது வெளிப்படை.

இவ்வதிகாரத்தில் மழையைக் கடவுளாக உருவகித்துத் திருவள்ளுவர் பத்துக் குறட்பாக்களில் விரித்துரைக்கிறார் என்பதே பொருத்தமானதாகும். இது குறித்துப் பன்மொழிப் புலவர் க. அப்பாத்துரையார்,

> "கடவுளது இன்ப வடிவின், அன்புருவின் சின்னம் மழை. இறைவாழ்த்து அதிகாரத்தில் கடவுளின் பன்பாற்றல்களை யெல்லாம் தொகுத்துரைத்த வள்ளுவர், இந்த வான்சிறப்பு அதிகாரத்தில் வெளிப்படையாக மழைச் சிறப்பை மட்டுமே கூறுகின்றாரானாலும், உண்மையில் அவர் முதற்பொருள் மழையை வருணிப்பதன்று கடவுளின் கருணையாற்றலை வகுத்துரைப்பதே ஆகும்"

என்று விளக்கம் தருகிறார்.

> "இறைவன் உயிர்களிடத்தில் கொண்ட அருட் செயலாக மழையைக் கூறுவர். அவன் அருளின் வடிவம் இன்றும் மழையைக் கூறலாம். திருவெம்பாவை, மழையில் உமாதேவியைக் காண்கிறது. இறைவன் அருளையே சித்தாந்தம் தேவியாகக் கூறும், திருப்பாவையும் இறைவன் அருட்கோலத்தை மழையில் காண்கிறது".

என்று ப. அருணாசலம் (குறளின் செயதி, பக். 26-27) குறிப்பிடுகிறார்.

இறைவனின் அருட்சக்தி- வான் (11, 18, 19, 20) அமிழ்தம் (11), துப்பு (12), விண் (13), விசும்பின் துளி (16), மழை (12, 15), புயல் (14), எழிலி (17) என்னும் எட்டுப் பெயர்களால் உருவகப்படுத்தப்பட்டுள்ளது. கடவுள் வாழ்த்து அதிகாரத்தில் இடம் பெறும் குறட்பாக்களைப் போலல்லாமல் தூய ஆவியாகிய அருட்சக்தி மட்டுமே இவ்வதிகாரத்தில் சிறப்பித்துப் போற்றப்படுதல் காண்க.

வான் என்பதும் விண் என்பதும் ஒரே பொருளைத் தருகின்றன. வானின் உறுப்புகளாக விசும்பின் துளி, மழை, புயல், எழிலி ஆகியன கூறப்படுகின்றன. விசும்பின் துளி பல்கிப் பெருகும் போது மழையாகப் பெய்கிறது. எழிலி என்பது மேகத்தைக் குறித்தது. அழகு என்றும் பொருள், புயல் என்பது மிகு வேகத்தையும் ஆற்றலையும் இடி மினனலோடு கூடிய மழையையும் குறிப்பது. இப்பின்னணிகளோடு பெந்தக் கோஸ்து நாளன்று தூய ஆவியின் வருகையைக் குறித்துத் திருத்தூதர் பணிகள் என்னும் புதிய ஏற்பாட்டு நூல் விவரிப்பதை ஒப்பு நோக்கலாம்.

பெந்தக்கோத்து நாளன்று இயேசுவின் சீடர் கூடியிருந்த மேல் வீட்டறையில்,

“திடீரென்று கொடுங்காற்று வீசுவது
போன்று ஓர் இரைச்சல் வானத்திலிருந்து”
உண்டாகி, அவர்கள் அமர்ந்திருந்த வீடு முழுவதும் ஒலித்தது.

“மேலும் நெருப்புப் போன்ற பிளவுற்ற நாவுகள்
ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்ததை
அவர்கள் கண்டார்கள்.
அவர்கள் அனைவரும் தூய ஆவியால்
ஆட் கொள்ளப்பட்டனர்.” (திருத்தூதர் பணிகள் 2:2-4)

இப்பகுதியில் மூவொரு கடவுளின் தூய ஆவியியானவர் பொழிந்தருளப்பட்ட நிகழ்ச்சி மேலே விவரிக்கப்பட்டுள்ளது. இப் பின்புலத்தோடு வான் சிறப்பு அதிகாரத்தை நோக்கும் போது, தூய ஆவியாகிய கடவுளைத் திருவள்ளுவர் வாழ்த்துவது நன்கு புலனாகும்.

அருட்சக்தியாகிய தூய ஆவியானவர் மொழியப் படுவதால் விளையும் பயனைத் துப்பு, அமிழ்தம், உழவு, ஒழுக்கு, பூசனை, தானம், தவம் முதலிய சொற்களால் திருவள்ளுவர் விளக்கிக் காட்டுகிறார். துப்பு என்பதும் அமிழ்தம் என்பதும் உணவினைக் குறிக்கும் சொற்கள் ஆகும். துப்பு என்னும் சொல் ஆன்மீக உணவினைக் குறிப்பது.

“விண்ணகத்திலிருந்து இறங்கி வந்த
வாழ்வு தரும் உணவு நானே. இந்த
உணவினை எவராவது உண்டால் அவர்
என்றுமே வாழ்வார்” - யோவான் 6;51

என இயேசு கூறியவை கூர்ந்து நோக்கற்பாலன. தன்னையே உணவாகக் கொடுப்பதாக இயேசு கூறிய போது அவரின் மாணாக்கராலும் மற்ற யூதராலும் அதன் உண்மைப் பொருளைப் புரிந்து கொள்ள இயலவில்லை. அவர்கள் முணுமுணுத்துக் கொண்டிருந்த போது,

> "வாழ்வு தருவது தூய ஆவியே, ஊனியல்பு
> ஒன்றுக்கும் உதவாது நான் கூறிய வார்த்தைகள்
> வாழ்வு தரும் ஆவியைக் கொடுக்கின்றன" - யோவான் 6:63

என மேலும் விளக்கமளித்து, ஆவியானவரே வாழ்வளிக்கும் உணவாயிருக்கிறார் என உறுதிப் படுத்துவது நோக்கத்தக்கது.

இங்குக் குறிக்கப்படும் வாழ்வு என்பது நீடுவாழ்வைக் குறிப்பிடுவது ஆகும். நீடு வாழ்வு என்பதனைத் திருவள்ளுவர் அமிழ்தம் (குறள், 11) என்னும் சொல்லால் சுட்டுகிறார். ஆவியானவரையும் நீடு வாழ்வையும் இணைத்துக் காட்டும் பகுதிகள் திருமறையின் பகுதிகள் பலவற்றில் குறிப்பிடப் படுகின்றன சான்றாக,

> "ஆவி உயிர்ப்பிக்கிறது (கொரிந்தியர் 6:3)
> ஆவிக்கென்று விதைத்தால் நீடுவாழ்வு உண்டு" (கலாத்தியர் 6:8)

> "தூய ஆவியின் துணையோடு ஊனியல்பைச்
> சாகடித்தால் வாழ்வீர்கள்" (உரோமையர் 8:13)

போன்ற பகுதிகளைக் குறிப்பிடலாம்.

மழை பொய்த்து விடுமாயின் உழவுத் தொழில் செய்ய முடியாது என்பதை, 'ஏரின் உழாஅர் உழவர்' என்னும் தொடரால் திருவள்ளுவர் குறிப்பிடுகிறார். இதில் உழவுத் தொழில் நடைபெறுவதற்கு மழை பெய்தாக வேண்டும் என்னும் உலக வழக்கத்தை ஆன்மீகத்தின் மேல் திருவள்ளுவர் ஏற்றிக் கூறுகிறார். தூய ஆவியின் அருட்பொழிவு குறையும் போது அதாவது, புயலென்னும் வாரி வளம் குன்றிக் கால் அருட்தொண்டாகிய (நற்செய்திப் பணி) உழவுத் தொழிலை நற்செய்தியாளர் செய்ய இயலாது என்பது கருத்து. உழவு செய்தால் தான் நிலத்தைப் பண்படுத்திப் பயிர்த் தொழில் செய்ய முடியும். அவ்வாறே, சொல்லேருழவராகிய நற்செய்தியாளர் திருவசனத்தை விதைத்து அறுவடை செய்வதற்குத் தூய ஆவியின் துணை தேவையாகிறது. உழவன் மழையை நம்பியிருப்பது போல, நற்செய்தி ஊழியனும் ஆவியானவரை நம்பியிருக்கிறான். ஆவியாரின் துணை கொண்டுதான் கரடு முரடான உள்ளங்களை உழுது பண்படுத்தித் திருவசனத்தை விதைக்க முடியும். ஆன்மீகப் பயிரையும் வளர்க்க முடியும். விளைச்சலை அறுக்கவும் முடியும்.

தூய ஆவியின் துணை இல்லையாயின் திருமறை வசனங்களை மற்றவருக்கு அருளமுடியாது என்பதைத் தானம் (குறள், 19) செய்ய முடியாது என்றும் இறைவனை நோக்கித் தவம் செய்யவும் முடியாது என்றும் குறள் கூறுகிறது. மேலும் கடவுளைப் பூசிப்பதற்கும் (ஆராதிப்பதற்கு)

தூய ஆவியின் துணை வேண்டற்பாலது என்பதைச் ‘சிறட்பொடு பூசனை செல்லாது, வானம் வறக் மேல்’ (குறள், 18) என்றும் குறிப்பிடுகிறது திருக்குறள்.

இருபதாம் குறட்பாவில், மழையின்றேல் ஒழுக்கு இல்லை என்று திருவள்ளுவர் குறிப்பிடுகிறார். இங்குச் சுட்டப்படும் ஒழுக்கு என்பது எதனை ? ‘அந்நீர் இடையறாதொழுகும் ஒழுக்கு வானையின்றி அமையாது’ என்று பரிமேலழகர் உரை காணுகிறார். மழை பெய்தால் தண்ணீர் ஒழுகும் ; பெய்யாவிட்டால் தண்ணீர் ஒழுகாது – இந்தச் சாதாரணச் செய்தியைக் கூறுவதற்காகவா திருவள்ளுவர் இக்குறளை யாத்துள்ளார் ? இல்லை ! ஒழுக்கு என்பது நல்லொழுக்கத்தைக் குறிக்கிறது. ஆவிக்கேற்ற படி நடக்கும் போது மாம்ச இச்சையாகிய ஊனியல்பை நிறைவேற்ற மாட்டீர்கள் (கலாத்தியர் 5:16) என எழுதும் பவுலடிகளார் ஆவியின் கனிகள் பற்றி அவ்அதிகாரத்தின் இறுதிப் பகுதியில் (கலா 5:22–23) குறிப்பிடுவன நோக்கத்தக்கன. ஆவிக்கேற்படி வாழ்பவன் பிழைப்பான் ; ஆவிக்கு மறுதலையான ஊனியல்பின் படி வாழ்பவன் சாவான் என்பதை,

> “தம், ஊனியல்பாகிய நிலத்தில் விதைப்போர்
> அந்த இயல்பிலிருந்து அழிவையே அறுவடை
> செய்வர். ஆவிக்குரிய வாழ்வாகிய
> நிலத்தில் விதைப்போர் அந்த ஆவி அருளும்
> நிலை வாழ்வை அறுவடை செய்வர்”. – கலாத்தியர் 6:8

என்னும் பகுதி விளக்குகிறது. ஒருவரது சாவுக்கும் வாழ்வுக்கும் காரணமாய் அமைவது ஆவியே ஆகும் என்பதை மேற்குறித்த வசனம் தெளிவு படுத்துகிறது. இதனைத்தான் திருவள்ளுவர்,

> “கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
> எடுப்பதூஉம் எல்லாம் மழை” – குறள், 15

என்னும் குறட்பாவில் குறிப்பிடுகிறார்.

தூய ஆவியின் வாழ்த்து, ஆவியின் இயல்பு, ஆவிக்கேற்ப வாழ்வோரின் மேன்மை, ஊனியல்பிற்கேற்ப வாழ்வோரின் கேடு முதலிய கருத்துக்கள் வான் சிறப்பில் கூறப்படுகின்றன. இந்நிலவுலக வாழ்க்கைக்கும் நீடு வாழ்விற்கும் தூய ஆவியின் துணை தேவையாகிறது. அதனால் தான் திருவள்ளுவர்,

> “விசும்பின் துளிவீழின் அல்லாற்மற் றாங்கே
> பசும்புல் தலைகாண் பரிது” – குறள், 16

என்று பசும்புல் போன்ற ஆன்மாக்கள் ஆவியின் அருள் இல்லையேல் தலைகாட்ட இயலாது என்றும், ஆவியானவர் அருளாவிடில் ஆன்மப் பசி ஏற்பட்டு வருந்தும் (உள்நின்று உடற்றும் பசி, 13) என்றும் குறிப்பிடுகிறார். வான்சிறப்பில், ஆவியாரால் ஏற்படும் வாழ்வும் வளமும் அவரருள் இல்லாதவிடத்து ஏற்படும் கேடும் கூறப்படுகின்றன.

தூய ஆவியைக் குறித்துப் பழைய ஏற்பாட்டுப் பகுதிகள் குறிப்பிடும் இடங்களை வான்சிறப்பில் கூறப்படும் மழை, பனி, புல் போன்ற கூறுகளோடு ஒப்பிட்டுக் காணும் போது மேலும் தெளிவு பெறுகின்றன. ஒசேயா என்னும் நூலில் ஆண்டவர்,

"மழையைப் போலவும், நிலத்தை நனைக்கும்
இளவேனிற் கால மாரி போலவும்
அவர் நம்மிடம் வருவார்" - ஓசேயா 6:3

என்று குறிப்பிடுகிறது. மீக்கா என்னும் இறைவாக்கு நூலில்

"ஆண்டவரிடமிருந்து வரும் பனியைப் போலவும்
மனிதருக்காகக் காத்திராமலும் மானிடருக்காகத்
தாமதிக்காமலும், புல் மேல் பெய்கிற மழைத்
துளிகள் போலவும், பல மக்களிடையே இருப்பார்கள்" - மீக்கா 5:7

என்று குறிக்கப்படுவதும் நோக்குதற்குரியது. ஆவியானவரைத் தண்ணீராக உருவகித்துக் கூறும் பகுதிகள் திருமறையில் பல இடங்களிலா; உள்ளன. யோவான் 4:10, 14 முதலிய பகுதிகளையும் இங்குச் சுட்டலாம். இனி நீத்தார் பெருமை குறித்துச் சற்று ஆய்வு செய்யலாம்.

நீத்தார் பெருமை

திருவள்ளுவர் பெருமைப் படுத்திக் கூறும் நீத்தார் என்பவர் சமணமோ பௌத்தமோ சிறப்பித்துக் கூறும் உலகப் பற்றுகளை நீத்தாராகிய துறவியைக் குறிப்பிடவில்லை. விண்ணுலகை நீத்து மண்ணுலகிற்கு மானிடனாக வந்த இயேசு பெருமானை அது (நீத்தார் பெருமை) வாழ்த்துகிறது. ஏனெனில் இவ்வதிகாரம் பாயிரத்தில் அமைந்துள்ளது. பாயிரம் மூவொரு கடவுளை வாழ்த்துகிறது என்பதை முன் குறித்த பகுதிகளில் கண்டோம். அடுத்துக் கடவுள் வாழ்த்தில் (குறள், 6) குறிப்பிடப்படும் 'ஐந்தவித்தான்' என்னும் கடவுளைச் சுட்டிய பெயர் நீத்தார் பெருமை அதிகாரத்திலும் (குறள், 25) ஆளப்படுகிறது. இதனால் நீத்தார் என்பது மனிதனாகிய துறவியைக் குறிக்காமல் அது கடவுளைக் குறிக்கிறது என்பதை விளக்கவே ஐந்தவித்தான் என்னும் சொல்லான் பரம்பொருளாகிய கடவுளையும் பரத்துவத்தை நீத்து, மனிதனாக வந்த அவதார நிலையினையும் ஒருவராகவே குறிப்பிடுகிறார்.

அவதாரமாக வந்த ஐந்தவித்தான் என்பது ஐம்புலன்களால் இயன்ற தம் உடலையே, கொலைக் கருவியாகிய ஒரு பொறியில் பலியாக (அவி) ஈந்தார் (குறள், 6) என்றும் அவ்வாறு பலியானவர் சாவைவென்று உயிர்த்தெழுந்தார் என்பதை

"ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு ளார்கோமான்
இந்திரனே சாலும் கரி" (குறள், 25)

என்னும் குறட்பாவிலும் குறிப்பிடுகிறார். இது முன்னர் விளக்கப்பட்டது. ஐந்தவித்தான் ஆற்றல் எத்தகையது என்பது 'கூற்றம் குதித்த (குறள், 269) ஆற்ற'லாகும். கூற்றம் என்பது இந்தியச் சிந்தனையின் படி சாவினைக் குறிப்பிடுவது ஆகும்.

நீத்தார் என்றால் எதனை நீத்தார் ? இதற்கு விடை – விண்ணுலகை நீத்தார் என்பது ஆகும். இதனைச் திருவிவிலியப் பகுதியோடு ஒப்பிட்டுக் காணலாம். பவுலடிகளார் பிலிப்பியருக்கு எழுதிய திருமுகப் பகுதியில்,

"கடவுள் வடிவில் விளங்கிய அவர், கடவுளுக்கு
இணையாயிருக்கும் நிலையை வலிந்து பற்றிக்
கொண்டிருக்க வேண்டிய தொன்றாகக் கருதவில்லை"

"அவர் தம்மையே வெறுமையாக்கி அடிமையின் வடிவை ஏற்று மனிதருக்கு ஒப்பானார். மனித உருவில் தோன்றி, சாவை ஏற்கும் அளவுக்கு, அதுவும் சிலுவைச் சாவையே ஏற்கும் அளவுக்குக் கீழ்ப்படிந்து தம்மையே தாழ்த்திக் கொண்டார்".

– பிலிப்பியர் 2:6-8

என்று இயேசு விண்ணுலகை இந்த அதிகாரம் மனிதனாகிய துறவியைக் குறிக்கவில்லை என்று இப்பகுதியை ஆய்ந்த அறிஞர் பெருமக்கள் குறிப்பிடுகிறார்கள். சமணமும் பௌத்தமும் குறிப்பிடும் துறவியரைப் போற்றுவதாக இருந்தால் 'துறவியர் பெருமை' என்று அதிகாரத்திற்குப் பெயரிட்டிருக்கலாம். மேலும் கடவுள் வாழ்த்தில் இடம் பெறும் ஐந்தவித்தான் என்பது நீத்தார் பெருமையிலும் ஆளப்படுவதால் துறவுநிலையில் உள்ளோர்க்கும் பரம்பொருளாகிய கடவுளுக்கும் பொருந்துமாறில்லை. மேலும் அகலிகையின் கணவன் கௌதம முனிவனுக்கும் இது பொருந்தாது. துறவு நிலையைச் சிறப்பிப்பதற்குத் துறவு, அவா அறுத்தல், கூடாவொழுக்கம் போன்ற அதிகாரங்கள் துறவியர் பெருமையைக் கூறுவனவாயுள்ள போது, பாயிரத்தில் துறவியர் பெருமை பேசப்பட வேண்டிய தேவை இல்லை. எனவே, இது மாந்த உடல் தாங்கி அவதாரமாக உலகிற்கு வந்து நல்வழி காட்டிய அறவோராகிய 'ஐந்தவித்தான் இயேசு'வை இவ்வதிகாரம் வாழ்த்திப் பெருமைப் படுத்துகிறது.

இவ் அதிகாரத்தில் திருவள்ளுவர் பயன்படுத்தும் பெயர்கள் இயேசு கிறித்துவைச் சுட்டி நிற்கின்றமையை அறிஞர் பலர் விளக்கிக் காட்டியுள்ளனர். அவற்றுள் ஒன்று 'நிறைமொழி மாந்தர்' (குறள், 28) என்பது, இது முக்காலத்தையும் உணர்த்தும் வினைத் தொகையாய், வார்த்தையாகிய இயேசு பெருமானை உணர்த்துகிறது. கடவுளின் வார்த்தையே உலகில் அவாரமாக வந்தார் என்று நற்செய்தி நூல்கள் விவரிக்கின்றன. புதிய மொழியாக்கத்தில் வார்த்தை என்பது வாக்கு என ஆக்கம் பெற்றுள்ளது.

“தொடக்கத்தில் வாக்கு இருந்தது
அவ்வாக்கு கடவுளோடு இருந்தது
அவ்வாக்கு கடவுளாயும் இருந்தது”

யோவான் 1:1

என யோவான் நற்செய்தி நூல் கூறுகிறது. இதன் விரிவாக,

“தொடக்கமுதல் இருந்த வாழ்வு அளிக்கும் வாக்கை
நாங்கள் கேட்டோம், கண்களால் கண்டோம் ;
உற்று நோக்கினோம் ; கையால் தொட்டுணர்ந்தோம்.
வெளிப்படுத்தப்பட்ட அந்த வாழ்வை நாங்கள்
கண்டோம், அதற்கும் சான்று பகர்கிறோம்”

- 1 யோவான் 1:1-2

என வரும் திருமுகப் பகுதிகள் அமைந்துள்ளன. தந்தையாகிய கடவுளிடத்தில் இருந்த வாக்கு, மாந்தனாக வெளிப்பட்டார் என்பதை விளக்கிக் காட்டுவதாக நிறைமொழி மாந்தர் என்னும் திருக்குறட் பகுதி அமைந்துள்ளது.

நிறைமாழி என்பது உலகத் துறவியர் எவருக்கும் பொருந்தாது என்பது வெளிப்படை. ஏனெனில் மாந்தனாகப் பிறப்பவர் எவரும் குறையுடைவரே. நிறை மனிதனாக வாழ்ந்தவர் எவருமிலர் ; எத்துறவியும் இல்லை. குறைகளையுடைய மாந்தன் இறைவனின் துணையோடு நிறைவான நிலையை நோக்கி வளர்நிலை பெற்று முழு மாந்தனாக, அதாவது, சான்றோனாக மாற்றம் பெற வேண்டும் என்பதுதான் திருக்குறளின் நோக்கம். சான்றாக, மெய்யுணர்தல் என்னும் அதிகாரத்தில்,

“ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு”        - குறள், 354

எனத் திருவள்ளுவர் சுட்டிக் காட்டுவது கூர்ந்து நோக்கற்பாலது. ‘மாந்தன் எவ்வளவுதான் தன்னைக் கட்டுப்படுத்தி ஐம்புலன்களையும் அடக்கினாலும் அதனால் ஒரு பயனுமில்லை. ஐம்புலன்களையும் அடக்கினாலும் இறைவனாகிய பரம்பொருளை உணராவிட்டால் அவர்க்குப் பயனில்லை’, என்பது மேற்குறித்த குறள் விளக்கும் உண்மையாகும். கடவுள் ஒருவர் தாம் மெய் ; மற்றவையெல்லாம் பொய் ; மெய்யாகிய பரம் பொருளை உணர்தலே மெய்யுணர்தல். அந்த அதிகாரம் முழுவதிலும் கடவுளைக் குறித்த கருத்துகளைத் திருவள்ளுவர் விளக்கிக் காட்டுவது நினைவில் கொள்ளத் தக்கது ஆகும்.

அந்த நிறைமொழி மாந்தரின் பெருமையை மறைமொழி காட்டிவிடும் என்பது திருக்குறள். நிறைமொழி மாந்தரின் பெருமையை வெளிப்படுத்திக் காட்டுவது எது ? அது மறைமொழி ; மறைமொழி என்பது திருமறை ஆகும். திருமறை வாயிலாக வார்த்தையாக வந்த கடவுளின் பெருமைகளை அறிந்து கொள்ளலாம்.

அந்த நிறைமொழி மாந்தர் உலகத் துறவிகளிலிருந்து மாறுபட்டவர். எப்படி என்றால், உலகில் துறவியராக வாழ்ந்தோர் அனைவருமே இறந்து மறைந்து விட்டனர். ஆனால் துறந்தோராக இவ்வுலகிற்கு வந்த இயேசு பெருமான் இறந்து உயிரத் தெழுந்தவர். இதனைத் திருவள்ளுவர்,

"துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து
இறந்தாரை எண்ணிக்கொண் டற்று" - குறள், 22

என விளக்கம் தருகிறார். உலகில் பிறந்து வாழ்ந்த அனைவருமே இறந்து விட்டனர். இங்ஙனம் இறந்தோரை யெல்லாம் எண்ணிக் கணக்கிட்டால், துறந்தோராகிய இயேசு பெருமானின் பெருமை எத்துணை உயர்ந்தது என்பது விளங்கும்.

உலக மாந்தரின் ஒழுக்கம் பொய்சார் ஒழுக்கம் ; ஆனால் ஐந்தவித்தானாகிய கடவுள் ஒழுகிக் காட்டிய ஒழுக்கம் பொய்தீர் ஒழுக்கம் அதனை உலகிற்குக் காட்டவே 'ஒழுக்கத்து நீத்தார்' எனத் திருக்குறள் (21) பெருமைப் படுத்திக் கூறுகிறது. அந்த ஒழுக்க நெறியில் நிற்பவர்க்கு மட்டுமே நீடுவாழ்வு உண்டு என்பதும் குறள் காட்டும் உண்மையாகும். இனி மூவொரு கடவுளைத் திருக்குறள் வாழ்த்திப் பெருமைப் படுத்துகிறது என்பதை இன்னொரு குறிளின் வாயிலாக எடுத்துக் காட்டி இப்பகுதியை நிறைவு செய்யலாம்.

இயல்புடைய மூவர்

ஐந்தவித்தான் யார் என்பது பற்றி அறிஞரிடையே பெரும் கருத்து மோதல்கள் நிகழ்ந்ததைப் போல திருக்குறளில் இடம் பெறும் இயல்புடைய மூவர் யார் என்பது பற்றியும் பெரும் வாக்குவாதங்கள் நிகழ்ந்துள்ளன. அவை பற்றிய செய்திகளை அறிஞர்களின் நூல்களைக் கற்று அறிந்து கொள்க.

'இயல்புடைய மூவர்' என்னும் சொற்றொடர் பாயிரத்தை அடுத்த அதிகாரமாகிய இல்வாழ்க்கையில் முதற் குறட்பாவாக அமைந்துள்ளது.

"இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை" - குறள், 41

என்பது மேலே சுட்டிய குறட்பா ஆகும்.

திருக்குறட் பாயிரத்தையும் நூலையும் தொடர்பு படுத்தும் மூன்றாக இது அமைந்துள்ளது. குறள் கூறும் சிறப்பான அறங்கள் இரண்டு ; ஒன்று : இல்லறம் மற்றது : துறவறம். துறவத்தினும் இல்லறம் உயர்ந்தது. அதிகார வைப்பு முறையும் இதனை வலியுறுத்துகிறது. கடவுளால் உருவாக்கப்பட்ட மாந்த இனம் தலைமுறை தலைமுறையாகப் பெருகி வளர்வதற்குத் துணையாக இருப்பது இல்லறம். இல்லறமாகிய குடும்ப வாழ்க்கையில் குடும்பத் தலைவன் தலைமையிடம் பெறுகிறான். அவனுக்குத் திருவள்ளுவர் வழங்கும் பெயர் இல்வாழ்வான் என்பதாகும். குடும்பம் சிறக்க உதவுபவள் இல்லாள். குடும்ப வாழ்க்கையை இறைவன் உருவாக்கினார். குடும்ப வாழ்க்கையின் மூலம் பிள்ளைகள் பிறந்து செழிக்கின்றதன் வாயிலாகத் தலைமுறைகள்

தோன்றுகின்றன. இது தொடர்ந்த நிகழ வேண்டும் என்பது இறைத் திட்டம். இறைவனது இத்திட்டத்திற்குத் துணையாக இருப்பவனே இல்வாழ்வான். இதனை விளக்கும் வகையில் இல்லறத்தான் இயல்புடைய மூவராக விளங்கும் கடவுளுக்கு நல்வழியில் துணையாக விளங்குபவன் இல்வாழ்வான் என்று திருவள்ளுவர் மொழிகிறார்.

இயல்புடைய மூவர் என்னும் தொடர் இயல்பிலேயே அருவம், உருவம், அருவுருவமாக விளங்கும் மூவொரு கடவுளைக் குறிப்பதாகும்.இயல்பாகவே ஒன்றுபட்ட மூவர் என்பதே இயல்புடைய மூவர் என்பதன் பொருளாகும். மூன்றில் ஒன்று, ஒன்றில் மூன்று என்பதன் வழி மூவொரு கடவுளை விளக்குவர், மூவரும் ஓரே என்பது கடவுளின் இயல்பு ; அல்லது இயற்கைத் தன்மை. அந்த மூவொரு கடவுளுக்குத் துணையாக விளங்குபவன். இல்லறத் தான் என்பது மேலே குறித்த திருக்குறளின் விளக்கமாக அமைகிறது. இதனைப் பரிமேலழகர் கடவுள் வாழ்த்தின் தொடக்கத்தில் “இவ்வாழ்த்து ஏற்புடைய கடவுளை என அறக, என்னை ? சத்துவ முதலிய குணங்களால் மூன்றாகிய உறுதிப் பொருட்டு, அவற்றான மூவராகிய முதற்கடவுளரோடு இயைபுண்டாகலான், அம்மூன்று பொருளையும் கூறுலுற்றார்க்கு அம்மூவரையும் வாழ்த்துதல். முறைமையாகலின் இவ்வாழ்த்து அம்மூவர்க்கும் பொதுப்படக் கூறினாரென உணர்க” என்று உரை கண்டுள்ளார். இது முன்னரும் வேறிடத்தில் குறிக்கப்பட்டது.

நிறைவுரை

எனவே, மூவொரு கடவுளை வாழ்த்துவதாகத் திருக்குறளின் பாயிரப் பகுதி அமைந்துள்ளது. இறையியலில் மூவொருமைக் கோட்பாட்டை உலகுக்கு வழங்கியது கிறித்தவ சமயம், இந்திய மண்ணில் கிறித்தவ சமயம் கி.பி. 49-72ஆம் ஆண்டுகளில் வேர் கொண்டு வளரத் தொடங்கியது. இக்காலக் கட்டத்திற்குப் பிறகே தமிழ்ப் பக்தி இயக்கமும் சைவ, வைணவ சமயங்களின் விரிவாக்கமான அறுவகைச் சமயமும் உருப்பெற்று வளரலாயின. தமிழ்ச் சமயத்தில் மூவொரு கடவுட் கோட்பாடு, மும்மூர்திக் கோட்பாடாக வளர்ச்சியடைந்தது என்பதை இந்தியச் சமயங்களின் வரலாறு காட்டுகிறது. தோமையரால் விதைக்கப்பட்ட கடவுட் கோட்பாடு தமிழர் சமயத்திலும் இந்தியத் தத்துவங்களிலும் பரவி உருவாகத் தொடங்கியதை இந்திய மக்கள் கண்டு உண்மைநிலை தெளிவடையும் காலம் தொலைவில் இல்லை. ‘உண்மையை அறிவீர்கள் ; உண்மை உங்களுக்கு விடுதலை அருளும்.’